# மணமக்களுக்கு சில யோசனைகள்





ஆசிரியை :
சீதாலக்ஷ்மி

ராமன் பதிப்பகம்
சென்னை-18

முதற்பதிப்பு : மே. 1952.
ஆறும் பதிப்பு : ஏப்ரல் 1960.


விலை ரூ. 1-50

புது மணத் தம்பதிகளுக்கும், கலியாணமாகக் காத்திருக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும், இல்லற வாழ்க்கையில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள 'குடும்பி'களுக்கும் சமர்ப்பணம்.

அச்சிட்டோர் :
வினோதன் பிரஸ்
33. ஜோன்ஸ் தெரு.
சென்னை-1

## உங்களுக்கு ஒரு வார்த்தை

மணமக்களுக்கு உபதேசம் செய்வதாகச் சொல்லிக் கொண்டு பல புத்தகங்கள் வருகின்றன. அபூர்வமாக இரண்டொரு புத்தகங்களைத் தவிர மற்றவையெல்லாம் 'பக்கம் நிரப்பி' களாகவே காட்சியளிக்கின்றன. சிலர் மணமக்களுக்கு அத்தைப் பாட்டி உபதேசம் செய்வதைப் போல் எழுதியுள்ளனர். இத்தகைய உபதேசத்தைச் செய்ய அநேக 'மாஜி' கிழங்கள் இருக்கவே இருக்கின்றனர்.

சிலர் ஆண் பெண் உறவைப் பற்றி விளக்குவதாகக் கூறிக்கொண்டு, வெறும் உடல் சம்பந்தப்பட்ட ஆபாசங்களை எழுதித் தள்ளியுள்ளனர். இவர்கள் தாம்பத்ய வாழ்க்கையையே கேவலம் சதைப்பிண்டப் பிணைப்பு என்று நினைத்துவிட்டனர்.

மேற்கூறிய இரண்டு குறைகளும் இல்லாத முறையில் எழுதுவதற்குப் பாடுபட்டுள்ளேன். கூடியவரையிலும் விஞ்ஞான ரீதியாகவும் மனோதத்துவ முறைப்படியும் எழுதியுள்ளேன். பக்கங்கள் இடங் கொடுக்காததால் சிற்சில விஷயங்களை விளக்கிக் கூற முடியவில்லை. இரண்டொரு இடங்களில் 'விரசமாகப் பட்டாலும்' தவிர்க்க முடியாத தேவையை முன்னிட்டு எழுதப்பட்டிருக்கிறது.

இப் புத்தகம் ஒவ்வொரு ஆணும் பெண்ணும்படிக்க வேண்டியது என்று நம்புவீர்களானால், உங்களுடைய நண்பர்களுக்கும் சிபாரிசு செய்யுங்கள். அதைப்பற்றிய உங்களுடைய அபிப்பிராயத்தைப் பதிப்பகத்தாருக்கு எழுதியனுப்புங்கள்.

சீதாலக்ஷ்மி

# பத்திரிகைகள் பாராட்டுகின்றன

## "ஹிந்து" 21—9—52

சமீப காலத்தில் ஆண் பெண் உணர்ச்சி பற்றியும், குடும்ப வாழ்க்கை பற்றியும் உபதேசிக்கும் கருத்தைக் கொண்டு பல நூல்கள் வெளி வந்துள்ளன. அவற்றுள் பெரும்பாலானவற்றில் ஆபாசத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் வித்தியாசமில்லாமல் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் இப்புத்தகத்தைப் படிக்கும்போது நமக்கு ஒருவித திருப்தி ஏற்படுகிறது. உடற்கூறு சம்பந்தமாகவும் உளக்கூறு சம்பந்தமாகவும் விமர்சித்து விட்டு இந்நூல் ஆசிரியை, புணர்ச்சி சம்பந்தமான சரியான முறைகளையும் கர்ப்பத்தடை பற்றியும் மலடு மாற்றம் பற்றியும் பல ஆலோசனைகளைக் கூறியுள்ளார்.

இவர் கூறும் ஆலோசனைகள் யாவும் பயனுள்ளவையாகவும் நியாயமாகவும் உள்ளன. வாழ்க்கையின் தலைவாசலிலே அடி எடுத்து வைக்கும் இளம் தம்பதிகளுக்கு சுகாதாரமும் மனமகிழ்வும் நிரம்பிய புது வாழ்வை நடத்த இந்நூல் மிகவும் பயன்படும்.

## "சுதேசமித்திரன்" 9—6—52

மணமக்கள் வாழ்க்கையை இனிது நடத்த சில விஷயங்களை இன்றியமையாது அறிந்துகொள்ள வேண்டும். ஆண் குறி பெண் குறிகளின் அமைப்பு, கருப்பை அமைப்பு, அண்டகோசம் முதலிய உடலமைப்பு சம்பந்தமான விஷயங்களும் புணர்ச்சிக்குரிய சரியான முறைகளும், அவ்விஷயங்களில் தம்பதிகளுடைய வாழ்க்கை காதலும் அன்பும் நிரம்பி இன்பம் செழிக்க வேண்டுமானல் காம சுகத்தைப் பரிபூரணமாக அனுபவிக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஆசிரியை இந்நூலில் இவ்விஷயங்களை யெல்லாம் படங்களுடன் மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் விளக்குகிறார்.

## "வீரகேசரி" 6—7—52

திருமணத்திற்கு முன்பும் திருமணம் முடிந்த பின்பும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அவசியம் அறிந்திருக்க வேண்டிய பல தகவல்கள் இந்நூலில் எளிய நடையில் ஸ்பஷ்டமாக எடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. திருமணத்தின் அர்த்தம், உடலமைப்பு, இல்லற சுகத்தை அடையும் வழி, கர்ப்பத்தடை, மலடும் மாற்றமும் இவைபோன்ற பல விஷயங்களைப்பற்றி இந்நூலாசிரியை இதில் சுருங்கக் கூறி விளங்க வைத்திருக்கிறார்.

# மணமக்களுக்கு
*
# சில யோசனைகள்

---

## திருமணம்

திருமணம் என்பது மிகவும் புனிதமான சடங்கு என்று நமது பரம்பரையான நம்பிக்கை. மனிதன் தோன்றி பல்வேறு கட்டங்களைத் தாண்டி, நாகரிகத்தின் முதிர்ச்சிக் கட்டத்தில்தான் குடும்பம் என்ற முறை ஏற்படுகிறது. எனவே, நமது இலக்கியங்களும் ஒழுக்க நூல்களும் குடும்பத்தின் மதிப்பைப் பலவாறு சிறப்பித்துக் கூறுகின்றன.

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை" என்று கூறுகிறார் வள்ளுவர்.

"காதலொருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கைகொடுத்து, மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும் மாண்புறச் செய்து, வாழ்வமடி" என்றார் பாரதி. ஆனால், இந்த இல்வாழ்க்கையை இவ்வளவு தூரம் புகழும் நாம் நடைமுறையில் எப்படி அனுஷ்டிக்கிறோம்? சாதாரணமாக ஒருவன் தன் நண்பரைச் சந்தித்தால் "என்னப்பா, உன்னுடைய மகனுக்கு வயதாகிறதே' ஏதாவது ஒரு பெண்ணைப் பிடித்துக் கட்டிப் போடக் கூடாதா?" என்கிறார். கல்யாணத்தைப் பற்றி எவ்வளவு அலட்சிய புத்தி?

இன்னும் சிலர் இருக்கிறார்கள். கல்யாண "சீசன்" ஆரம்பித்தவுடனே, "பிஸினெஸ்" ஜோராக நடக்குமோ

என்று பார்க்கிறார்கள். மார்க்கெட்டிலே மாப்பிள்ளை என்ற ஷேருக்கு விலை உயர்கிறது. தரகர்கள் கமிஷனுக்காக ஆனையைப் பூனையாகவும், பூனையை ஆனையாகவும் ஆக்கு கிறார்கள். 'திருமணம்' என்று இலக்கியங்களும் பெரியோர் களும் புகழ்ந்த ஒன்று, கேவலம் வியாபாரப் பொருளாக மாறிவிடுகிறது.

ஆனால், உண்மை என்ன ?

திருமணம் என்பது மனித வாழ்க்கையில் ஒரு முக்கிய மான கட்டம். இரண்டு வெவ்வேறு ஜீவன்கள் ஒருவரோடு ஒருவர் தம் வாழ்க்கையை இணைத்துக்கொள்ளும் மகோன் னதமான சம்பவம். இதற்கு முன்பு வெவ்வேறு விதமான சூழ்நிலையில் வளர்ந்த இருவரும் ஒன்றாகப் பிணைக்கப்படு கின்றார்கள். இரண்டுவிதமான மனங்களும் ஒன்று சேர்ந்து எதிர்காலத்தை நோக்கி முன்னேற வேண்டியிருக்கிறது. அன்று பிணைக்கப்படும் இருவரும் வாழ்நாள் முழுவதும் இணைந்து வாழவேண்டியதிருக்கிறது. இப்படிப்பட்ட முக்கியமான சேர்க்கையை லேசாக எண்ணிவிடுவது மிகவும் கேவலமான செய்கை.

சாதாரணமாக இரண்டு பொருள்களை இணைத்துக் கலப்பதே மிகவும் சிரமமான காரியம். கலக்கப்படும் இரண்டு பொருள்களும் இணையும் ரகத்தைச் சேர்ந்தவை யாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கலவை வெற்றி யடையாது ; முறிவு ஏற்படும்.

திருமணம் என்ற சம்பவத்தால் இணைக்கப்படுபவை மனங்கள். மனம் என்பது மிகவும் சூட்சுமமான வஸ்து. ஒவ்வொருவருடைய மனத்திலும் எத்தனையோ விதமான எண்ணங்களும் அபிலாசைகளும் நிறைந்திருக்கின்றன. இந்த இரண்டு மனங்களும் ஒன்றை ஒன்று தழுவி இணைந்து போனால்தான் மண வாழ்க்கை மண வாழ்க்கை யாக அமைய முடியும். இல்லாவிட்டால் மண வாழ்க்கை குண வாழ்க்கையாகாது.

பண்டைத் தமிழர் சமூகத்தில் எப்பொழுதும் "காதல் மணமே" நிகழ்ந்து வந்திருக்கிறது. இப்பொழுது மாதிரி, எவளையாவது பார்த்து எவனுக்காவது கட்டி விட்டு பைய னுக்கு கால்கட்டு போட்டுவிட்டோம் என்று திருப்தி யடைவது இல்லை.

முதலில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சந்திக்கிறார்கள். அவனை அவளுக்கும், அவளை அவனுக்கும் பிடித்து விடு கிறது. ஒருவருடைய மனம் மற்றவரிடம் அளவு கடந்த அன்பு கொள்ளுகிறது. இருவரும் ஒருவரை ஒருவர் நினைந்து ஏங்குகிறார்கள். ஒருவருடைய துணை மற்றொரு வருக்கு இல்லாமல் வாழ்க்கையே இல்லை என்ற திடமான நம்பிக்கையும் முடிவும் பெறுகிறார்கள். இருவரும் மனம் விட்டுப் பேசி மகிழ்ந்து, மணம் செய்துகொண்டு இருவ ருடைய வாழ்க்கையையும் இணைத்துக் கொள்வதென்று முடிவு செய்கிறார்கள். இந்தத் திட்டத்துக்குப் பெயர்தான் களவியல்,

இருவருடைய மனத்திலும் காதல் வளர்ந்துவிட்டால் ஒருவர் செய்தது அனைத்தும் மற்றவர்க்கு இனிமை தருவ தாக அமைகிறது. எல்லாம் மனம் என்ற மந்திரவாதி செய்கிற வித்தை,

காதலித்த இருவரும் தத்தம் பெற்றோர்களிடம் தெரி வித்து, பின்னர் முறையாகக் கல்யாணம் செய்துகொண்டு வாழ்வில் இன்பம் துய்க்கிறார்கள். இதுதான் கற்பியல்.

ஆனால் இன்றைய நிலையில் எல்லோரும் காதலித்தே கலியாணம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கூற முடியாது. பெரும்பாலும் "கட்டி வைப்பது" என்ற முறையே இருந்து வருகிறது. எடுத்தவுடனேயே ஆண் பெண் உறவு கற்பியலில் ஆரம்பமாகிவிடுகிறது. எனவேதான் முன்பின் அறியாத இருவர் ஒருவருடன் ஒருவர் இணையும் பொழுது மனம் ஒன்றினாலும் ஒன்றுகிறது; இல்லாவிட் டாலும் இல்லை. மனம் இணைந்துவிட்டால் இல்லறம் நல்லற

மாகப் பரிணமிக்கிறது. அப்படியில்லாத போதுதான் குடும்ப வாழ்க்கையில் பிணக்குகள் ஏற்படுகின்றன குடித்தனம் தடித்தனமாக மாறுகிறது. ஏதோ தலைவிதி என்று யந்திர வாழ்க்கை நடத்துகிறார்கள் அநேகர். இன்னும் சிலருடைய வாழ்க்கை கற்பியலாக ஆரம்பித்து களவியலாக முடிந்து சீர் குலைவதையும் பார்க்கிறோம்.

## காதலும்—காமமும்

மனிதர்களின் வாழ்க்கையை இன்பமயமாக்கும் இந்தக் காதல் என்ற சக்தி எது ? அது எப்படிப் பிறக்கிறது என்பதைப் பார்ப்போம்.

முதலில், காதல் வேறு காமம் வேறு என்ற கேள்வியை எழுப்பிக்கொள்ள வேண்டியதிருக்கிறது. ஏனென்றால் "காதல்" என்றவுடனே மிகவும் புனிதமாகக் கருதிப் போற்றும் நாம், "காமம்" என்றவுடனேயே மிகவும் கேவலமான ஒன்று என்று முகத்தைச் சுளிக்கிறோம். ஆனால் வள்ளுவர் "காமத்துப்பால்" என்று தலைப்பிட்டு ஆண் பெண் உறவு இன்பத்தைப் பற்றிய பகுதியை எழுதியிருக்கிறார். அதிலே காதல் காமம் இரு வார்த்தைகளையும் உபயோகப்படுத்தி யிருக்கிறார். பெயர்ச் சொல்லாக வரும் பொழுது காமம் என்றும், அதை உடையவர்களைக் காதலர் என்றும் குறிப்பிட்டு உபயோகித்திருக்கிறார். உதாரணமாக

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை

என்று குறிப்பிடுகிறார். (அதாவது : நாணமும் நல் ஆண்மையுமாகிய தோணிகளை காமம் என்ற கடுமையான வெள்ளம் அடித்துச் சென்றுவிடுகிறது.) அதே மாதிரி காதல் என்ற வார்த்தையை வேறு இடத்தில் உபயோகித்திருப்பதையும் பார்ப்போம்.

ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்குதல்.

காதலர் கண்ணே யுள.

என்றும் (களவியல் குறிப்பறிதல்)

கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்

நுண்ணியர் எங்காத லவர்.

என்றும் (களவியல் காதற் சிறப்புரைத்தல்) குறிப்பிட்டு உபயோகித்திருக்கிறார்.

என்றபோதிலும், இப்பொழுது நடைமுறையில் நாம் முற்றிலும் வெவ்வேறு விதமான அர்த்தத்தைத்தான் புரிந்து கொள்ளுகிறோம். "காதல்" என்பது அறிவு, உள்ளம் சம்பந்தப்பட்ட உயர்ந்தது என்று எண்ணுகிறோம். காமம் என்பதை வெறும் உடல் சம்பந்தப்பட்ட வேட்கை என்று அர்த்தப்படுத்திக் கொள்ளுகிறோம்.

"காதல் என்பதில் காமம் இருப்பினும்
காமம் என்பதில் காதலே இல்லை"

என்று கூறுகிறார் நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை.

காமத்தில் காதல் இல்லாமல் இருக்கலாம். ஆனால் காதல் பிறப்பதற்கு முக்கிய கருவியாக அமைவது காமமே ஆகும். காமம் என்ற இயல்பான ஆசைதான் படிப்படியாகக் காதலாக மலருகிறது. காம இச்சை என்ற அடிப்படையிலே தான் காதல் என்ற சிறந்த ஸ்தூபி கட்டி எழுப்பப் படுகிறது.

காதல் மனோநிலை ஆண் பெண் இருபாலருக்கும் பருவ மடைந்த பின்னர்தான் ஏற்படுகிறது. ஐந்து வயதுச் சிறுவன் நாலு வயதுச் சிறுமியுடன் மிகவும் பிரியமாக இணைபிரியாமல் விளையாடித் திரிந்தால் அதை யாரும் காதல் என்று சொல்லமுடியுமா? முடியாது.

துஷ்யந்தனைக் கண்டதும் சகுந்தலை காதல் கொள்கிறாள். அவனுடைய அழகு அவளுடைய உள்ளத்தைக் கிளறி விடுகிறது. ஆனால் அதே சகுந்தலை விபரமறியாத சின்னஞ்

சிறுவயதில் துஷ்யந்தனைச் சந்தித்திருந்தால் காதல் ஏற்பட்டிருக்க முடியுமா ? முடியாது.

எனவே பருவதாகம் என்ற இயற்கையான உணர்ச்சி தான் காதலை உண்டாக்குகிறது. இந்தப் பருவதாகம் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படுகிறது. ஆணினுடைய உள்ளம் ஒரு பெண் துணையையும், பெண்ணுடைய உள்ளம் ஒரு ஆண் துணையையும் நாடித் தவிக்கிறது. இந்த நாட்டத்தைத்தான் காம இச்சையென்றும் விரகதாபம் என்றும் சொல்லுகிறோம்.

ஆனால் இந்தத் துடிப்பு இருப்பதற்காக ஒரு பெண் எல்லா ஆண்களையும் விரும்பி ஏங்குவதில்லை. அதேமாதிரி ஒரு ஆண் எல்லாப் பெண்களையும் விரும்பி எங்குவதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவரைப் பிடிக்கிறது. அவர்களிடம் தத்தம் மனதைக் கவரும் ஏதோ ஒன்று இருப்பதை உணர்ந்து, ஒருவரை ஒருவர் துணையாக ஏற்றுக்கொள்ளத் துடிக்கும் நிலையைத்தான் காதல் என்கிறோம். ஆசை ஒருதலைபட்சமாகும் பொழுதுதான் காமம் என்று இகழப்படுகிறது.

காதலுக்கு அடிப்படையாக விளங்குவது காமம் என்று ஏற்பட்டால், இயற்கையாக அமைந்துள்ள காம உணர்ச்சியை அடிப்படையாக வைத்தே வாழ்க்கையைக் காதல் நிரம்பியதாகவும் ஆக்க முடியும்.

புதிதாக மணமாகும் தம்பதிகள் இதற்குமுன் ஒருவரையொருவர் சந்திக்காமல் இருந்திருக்கலாம். அவர்களுடைய வாழ்க்கை காதலும் அன்பும் நிரம்பி இன்பம் செழிக்க வேண்டுமானால் காம சுகத்தைப் பரிபூரணமாக அனுபவிக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு ஆணிடம் பரிபூர்ண திருப்தியடைந்த ஒரு பெண் அந்த ஆணிடம் அன்பால் அடிமையாகிறாள். தன்னுடைய சர்வத்தையும் அவனுடைய பாதகாணிக்கையாகத் தியாகம் செய்துவிடுகிறாள். அதே

மாதிரிதான் ஆணும். பரஸ்பரம் பரிபூரண திருப்தியடைந்த இருவரும், ஒருவருடைய அன்புக்கு மற்றவர் அடிமையாகி, தனக்கென்று வாழாமல் தனது கூட்டாளிக்கென்றே நல்வாழ்க்கை நடத்த ஆரம்பிக்கிறார்கள்.

ஆனால் இந்தக் கலவி இன்பத்தைப் பரிபூரணமாக அனுபவிப்பதற்குக்கூட நம்மில் பலர் அறிந்துகொள்வதில்லை. இதைப்பற்றித் தெரிந்துகொள்ள என்ன இருக்கிறது என்று பலர் நினைக்கிறார்கள், "சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை" என்று தட்டிக் கழித்துவிடுகிறார்கள். இதைப்போலத் தீமை பயப்பது வேறொன்றுமில்லை.

ஒன்று, ஒருவரை ஒருவர் காதலித்து பரிபூரண மனோஐக்கியத்தின்மீது மணமாகி இருந்தால், கலவி இன்பத்தில் குறைபாடு இருந்தாலும் மனோநிலை சரிப்படுத்திக் கொண்டு போய்விடும். மனம் என்ற மயக்க மருந்துமின்றி, காம இச்சையைப் பரிபூரணமாக அனுபவிக்கத் தெரியாமலும் போய்விடும்போதுதான் குடும்ப வாழ்க்கையில் முரண்பாடுகளும் சிக்கலும் ஏற்படுகின்றன.

## உடலமைப்பு

மனித உடலைப் போன்ற அதிசயமான ஒன்று உலகத்தில் வேறெங்கும் தென்படுவது அரிது. உடற்கூறு சம்பந்தமாக ஆராயப் புகுந்தால், இயற்கையின் தொழில் திறமையை நினைந்து வியந்து நிற்க வேண்டியதாகும்

மனிதன் ரேடியோவைக் கண்டுபிடிப்பதற்கு முன்னரே இயற்கை நமக்குச் செவிகளாகிய ரேடியோவைத் தந்திருக்கிறது. எதிரிலிருக்கும் பொருளின் நிழலை வாங்கி அதனுடைய உருவத்தை நமது உள்ளத்திலே பதியவைத்து அறிவுக்குத் தெரியப்படுத்தும் அற்புதக் கருவியான கண்ணைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். இதே மாதிரி ஒவ்வொரு அவயவங்களைப் பற்றியும் அவற்றின் வேலைகளைப் பற்றியும்

ஆராயப் புகுந்தால் எவ்வளவோ விந்தை நிரம்பிய "எஞ்சினியரிங் கல்வி" பயில்வதுபோல ஆகும்.

இங்கு நாம் ஆண் பெண் ஆகிய இருபாலாரின் ஜனன இந்திரியங்களின் அமைப்பு பற்றியும், அவற்றின் வேலைகளைப் பற்றியும் மட்டும் விளக்கமாகத் தெரிந்துகொள்வோம்.

இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு, கலவி யின்பத்தில் மகிழும் தம்பதிகள் இவைகளைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டியதே மிகவும் முக்கியம். குழந்தைப் பருவத்திலிருந்து இந்த விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்வது மிகவும் பாதகமான, கேவலமான செயலென்று கருதும்படி போதிக்கப்பட்டு வந்திருக்கிறோம். எனவே இந்த விஷயங்களைப்பற்றிப் பேசுவதை "கெட்ட வார்த்தை" என்ற அடைமொழி வார்த்தையில்கூட நாம் சொல்வதுண்டு. நாம் என்ன செய்கிறோம் என்பதைத் தெரிந்துகொண்டு செய்தால்தான் எந்தக் காரியத்தையும் செவ்வனே செய்ய முடியும். அப்படி யில்லாமல் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது மாதிரி நடந்துகொள்ளும் தப்பான முறைதான் தாம்பத்ய வாழ்க்கையின் பல சங்கடங்களுக்கு அடிப்படைக் காரணமாக விளங்குகிறது.

## ஆண் குறி

ஆண் குறியின் முக்கிய உறுப்புக்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். (1) உற்பத்திசாலை. (2) சேமிப்புக் கிடங்கு. (3) வெளியிடும் வழி.

மனித சமுதாயத்தின் பாரம்பரிய வளர்ச்சியை முக்கியமாகக் கருதிய இயற்கை, ஒவ்வொரு ஆணிடமும் இரண்டு விந்து உற்பத்திசாலைகளைக் கொடுத்திருக்கிறது அவற்றைத்தான் "விதைக் கொட்டைகள்" என்கிறோம். அவை மிகவும் மிருதுவானவை. பல்வேறு ஜீவப் பொருள்களால்


திரட்டப்பட்டவை. மெல்லிய தோல் பைக்குள் பத்திர மாக வைக்கப்பட்டு இரண்டு தொடைகளும் சேருமிடத் தில் ஆண் குறித் தண்டின் அடிப்பாகத்தில் முட்டை வடிவ மாகத் தொங்குகின்றன. ஓர் ஆண், வாலிபப் பருவ மடைந்தவுடனேயே, இந்த விதைப் பையிலிருக்கும் ஜீவ தாதுக்களை சிருஷ்டிக்கும் "பாட்ரி செட்டுக்கள்" தங்கள் வேலையைத் தொடங்கிவிடுகின்றன. எத்தனையோ லட்சக் கணக்கான ஜீவ விந்துகளை உற்பத்தி செய்து குவித்தவண்ண மிருக்கின்றன.

ஆணுக்குப் பதின்மூன்று அல்லது பதினான்கு வயது ஆகும் வரை, விதைப்பை வேலையைத் தொடங்குவ தில்லை. அதன் பின்னர்தான் பக்குவமடைந்த வாலிபப் பருவம் பிறக்கிறது. அப்பொழுதுதான் மீசை அரும்பு கிறது. மகரக்கட்டு அவிழ்ந்து குரல் கனமடைகிறது. உடலிலே ஒரு புதிய பளபளப்பும் கட்டமைப்பும் பிறக் கிறது.

இந்தப் பருவத்திலிருந்து விதைப்பை விந்து அணுக்களை உற்பத்திசெய்ய ஆரம்பிக்கிறது. இந்த உற்பத்திப் பெருக் கம் அவனுடைய ஆயுள் காலம் முழுவதும் இடையருமல் நடந்து வருகிறது.

இவ்விதம் உற்பத்தியாகும் விந்துகள் ஒவ்வொரு புணர்ச்சி சந்தர்ப்பத்திலும் இரண்டு கோடியிலிருந்து ஐந்து கோடி வரையிலும் வெளியேறுகின்றன.

இரண்டு விதைக் கொட்டைகளிலுமிருந்து இரு மெல் லிய குழாய்கள் மேல்நோக்கிச் செல்லுகின்றன. அவை இடுப்பு வரையிலும் சென்று, அங்கிருந்து கீழ்நோக்கித் தணிந்து, அடிவயிற்றின் அடிப்புறத்திலுள்ள விந்துகள் சேமிப்பு அறையான சுரபி (GLAND)களை அடைகின்றன. இந்த இரண்டு சுரபிகளும் மூத்திரப் பைகளின் பின்புறத்தில் அமைந்துள்ளன. இந்த இடத்திலிருந்து இரண்டு சிறிய குழாய்கள் புறப்பட்டு ஆண்குறித் தண்டில் வந்து இணை





ஆண் குறியின் உள் அமைப்பு

1. மூத்திரப்பை
2. விந்து சேமிப்பு அறை (அல்லது விந்து சுரபி)
3. விந்துக் குழாய்
4. ஆண் குறி
5. ஆண் குறியைச் சுற்றி யுள்ள சதைக் கோளம்
6. விதைக் கொட்டை

கின்றன. இந்தக் குழாய்கள்தான் விந்துகளின் ராஜபாட்டை யாக விளங்குகின்றன.

விந்து உற்பத்தி இடைவிடாமல் நடந்துகொண்டுதா னிருக்கிறது. ஆனாலும் சம்போக காலத்தின் உச்சநிலையில் தான் இவை உடம்பிலிருந்து வெளியேற்றப்படுகின்றன. மற்ற இடைக்காலங்களில் இவை சேமிப்பு அறைகளான சுரபிகளில் நிரப்பி வைக்கப்படுகின்றன.




## ஆண் குறி (பக்கவாட்டு அமைப்பு)

| | | | |
|---|---|---|---|
| 1. | மூத்திரக் குழல் | 6. | சிறுநீர்ப் புற வழி |
| 2. | மூத்திரப் பை | 7. | விந்துக் குழாய் |
| 3. | விந்து சேமிப்பு அறை | 8. | விதைக் கொட்டை |
| 4. | மலக்குடல் | 9. | விதைப் பை |
| 5. | ஆண் குறித் தண்டு | 10. | ஆண் லிங்கம் |

11. மலத்துவாரம்.

இயற்கையின் திறமையில் எவ்வளவு தேர்ச்சி யிருக்கிறதோ அதுபோல சிக்கனமும் இருக்கிறது.

அதற்கு உதாரணம்போல இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிடலாம். சம்போக காலத்தில் ஜீவ விந்துகள் ஆணின் உறுப்பிலிருந்து பெண்ணின் கருப்பப் பைக்குச் செலுத்தப்

படுவதற்கு ஒரு குழாய் ஏற்பட்டிருக்கிறது. அதே குழாய் தான் உடம்பில் சேகரிக்கப்பட்டுள்ள கழிவு நீரையும் அப்புறப்படுத்த உபயோகப்படுகிறது. ஆனால் இதில் உள்ள பெரிய ஆச்சரியம் என்னவென்றால் ஒரே சமயத்தில் இரண்டும் நடைபெற முடியாது. ஆணின் சம்போக காலத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் சிறுநீர் வெளிப் படாது.

ஆணுக்கு மிகவும் உணர்ச்சியும், கூச்சமும் நிறைந்த பாகம் ஆண் குறியின் தண்டு நுனியான லிங்கம் என்ற இடமே. இந்த உணர்ச்சி மிகுந்த இடம் தோலால் மூடப் பட்டு அநாவசியமாக எதிலும் உராய்ந்து உணர்ச்சி குன்றிப் போகாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தபடி யாக உணர்ச்சியுடையது தண்டின் மற்ற பாகங்கள். விதைப் பை மிகவும் குறைந்த அளவு உணர்ச்சியுடையது.

ஆனால் சூழ்நிலைக்குத் தக்கபடி ஆணுக்கும் சரி பெண் ணுக்கும் சரி சரீரத்தின் எல்லா இடங்களுமே ஸ்பரிஸ இன்ப உணர்ச்சி உண்டாக்க முடியும்.

## பெண் உறுப்புக்கள்

ஆணுக்கும் பெண்ணுக்கும் நடைமுறையில் சிற்சில முக்கியமான மாறுபாடுகள் இருக்கின்றன. இந்த மாறுதல் கள் உணர்ச்சிகளிலும், பழக்க வழக்கங்களிலும், சரீர அமைப்பிலும் முக்கியமாக உள்ளன.

உடம்பை ஒட்டியுள்ள எல்லா தோல் பகுதிகளிலும் கணக்கற்ற நுண் நரம்புகளின் முனைகள் இணைக்கப்பட்டுள் ளன. அவை உணர்ச்சியை வாங்கி மூளைக்குத் தெரிவிக்க உதவியாக அமைந்துள்ளன. ஆனால் சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் இந்த நுண் நரம்புகளுக்கு சில குறிப் பிட்ட விதத்தில் அதிக உணர்ச்சியும் சக்தியும் கொடுக்கப் பட்டிருக்கிறது. உதாரணமாக கண்ணுக்குப் பார்க்கும்


சக்தியும் காதுக்குக் கேட்கும் சக்தியும் நாக்குக்கு சுவைக்கும் சக்தியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி காம உணர்ச்சிக்கும் சில முக்கிய பகுதிகள்—உறுப்புகள் ஒதுக்கிவிடப்பட்டிருக்கின்றன.

என்றாலும் எல்லா இடங்களிலும் காம உணர்ச்சியைத் தூண்டக்கூடிய அம்சங்களும் இருக்கின்றன.

காதுக்கு நேராக ஒரு அழகிய படத்தைக் காட்டினால் அதனால் எந்தவித உணர்ச்சியையும் எழுப்பிவிடமுடியாது. ஏனெனில் அந்த உணர்ச்சி கண்ணுக்கே உரியது. அதே மாதிரி காம உணர்ச்சியைத் தூண்டுவதற்கும் அதற்குரிய இடங்களில் அதற்குரிய சம்பவங்கள் நிகழவேண்டும்.

ஆணுக்கு இருப்பதைப் போலவே பெண்ணுக்கும் இரண்டு ஜீவதாது உற்பத்தி சாலைகள் உண்டு. ஆனால் அவை ஆணுக்கு வெளிப்படையாகத் தொங்குவதைப் போலல்லாமல் மறைமுகமாக உள்ளே இருக்கின்றன. அவைகளிலிருந்து உண்டாகும் ஜீவதாதுக்களை நேரடியாகக் கொண்டுவந்து ஆணுடைய ஜீவ தாதுடன் கலக்கும்படி செய்ய குழாய்களும் இல்லை. பெண் உற்பத்தி செய்யும் இந்த ஜீவதாதுக்குப் பெயர்தான் முட்டைகள். இந்த உற்பத்திசாலையைத்தான் நாம் அண்டகோசம் என்கிறோம். இந்த அண்டகோசங்கள் பெண்ணின் பின்புற அடி வயிற்றில் இருக்கின்றன.

பிறக்கும்பொழுதே பெண் குழந்தையின் அடிவயிற்றில் இந்த அண்டகோசங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றுள் பின்னால் உற்பத்தியாகப்போகிற அத்தனை முட்டைகளும் அணுக்களாக அடங்கிக் கிடக்கின்றன. இந்த அணுக்கள் பெண் மலர்ச்சிப் பருவம் அடையும்வரை நிச்சலனமாகத் தூங்கிக் கிடக்கின்றன. பெண் பருவம் அடைந்ததும் முட்டைகள் ஒன்றன்பின் ஒன்றாக வளர்ச்சியடையத்தொடங்கி, வளர்ச்சி முற்றியதும் அண்டகோசத்





கருப்பை அமைப்பு

1. அண்டகோசம்
2. முட்டைகளைக் கருப்பைக்கு இழுக்கும் நரம்புக் குழாய்கள்
3. கருப்பைக்கு முட்டை செல்லும் குழல் வழி
4. கருப்பையின் சதைச் சுவர்
5. கருப்பை
6. கருப்பையின் வாயில்
7. பெண்குறித் துவாரம்

நின் மேல் புறமாக வந்து வெடித்து வெளிக்கிளம்பி அடிவயிற்றின் கீழ்ப்பாகத்திற்கு வந்து சேருகின்றன. இரண்டு அண்டகோசங்களிலுமிருந்து ஒரே சமயத்தில் முட்டை வெளிப்படுவதில்லை. முதலில் வலதுபுற அண்டகோசத்திலிருந்து முட்டை வெளிப்படுகிறது. பின்னர் இடது புறத்திலிருந்து. இவை ஒவ்வொன்றுக்கும் இடையே சுமார் பதினைந்து நாள் இடைவேளை இருக்கிறது. அதாவது ஒவ்வொரு அண்டகோசத்திலிருந்து மாதம் ஒரு அண்டம் தான் வெளிப்படுகிறது.

இவ்விரண்டு அண்டகோசங்களுக்கும் நடுவில், உடம்பின் மத்யரேகைக்கு நேராகத்தான் கருப்பை அமைந்திருக்கிறது. இதுதான் குழந்தை வளரும் இடம், சித்தர்கள் குறிப்பிடும் "கருவூர்."




பெண் குறி அமைப்பு

1. அண்டகோசம்
2. கருப்பை
4. மூத்திரப்பை
5. பெண்லிங்கம்
6. பெண்குறித் துவாரம்

மற்றெல்லா இடங்களைப்போலவே கருப்பையிலும் சதை அமைந்திருக்கிறது. ஆனால் இதனுடைய விசேஷம் என்னவென்றால், இந்தச் சதை வளருகிறது உருமாறுகிறது. விரிகிறது. எனவே அதை இணைத்துள்ள எலும்புகளுக்கு அசைவு உண்டாக்குகிறது.

நாம் நமது விரல்களை ஆட்டவும் வளைக்கவும் முடியும். ஏனெனில் அதனுடைய எலும்பின் ஒரு நுனியிலிருந்து மற்றொரு நுனிவரை மெல்லிய சதை ஒட்டிப் பிடித்துக்கொண்

டிருக்கிறது. இந்தச் சதைகளின் நீளத்தைச் சுருக்கினல் விரல் வளைகிறது.

விரலிலுள்ள சதைக்கும் கருப்பையிலுள்ள சதைக்கும் முக்கியமான வித்தியாசமிருக்கிறது. விரலில் சதையை நமது எண்ணத்திற்குக் கட்டுப்படுத்தி இயக்க முடியும். கருப்பையிலுள்ள சதை அப்படிப்பட்டதல்ல. விரலிலும் மற்ற பாகங்களிலுமுள்ள சதை நமது உடலோடு வளர்ச்சியடைந்து வந்த ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் வளர்ச்சியை நிறுத்திவிடுகிறது. கருப்பையிலுள்ள சதை முக்கிய தேவை ஏற்படும்பொழுது அதற்குத் தக்கபடி வளரும் தன்மையுடையது. சாதாரண காலத்தில் சற்றேறக்குறைய மூன்று அங்குல நீளமும், இரண்டு அங்குல அகலமும் ஒரு அங்குல கனமும் உடையது. அண்டகோசத்திலிருந்து கிளம்பிய முட்டை, ஆண் விந்துவை ஏற்று, கருப்பைக்கு வந்து சேர்ந்து வளர ஆரம்பித்தவுடனே அதில் வளரும் கருவுக்கு ஏற்றபடி பையும் வள்ர ஆரம்பிக்கிறது. கரு குழந்தையாகி பிறக்கும் வரையிலும் அதனுடைய ''குடியிருப்புப் பிரச்சனை''யை கருப்பை சுலபமாகத் தீர்த்துவைக்கிறது. எல்லாம் வளர்ச்சியின் மூலம். குழந்தை பிறக்கும் தருணத்தில் இந்த வளர்ந்து சுருங்கும் சதைதான் மருத்துவச்சி வேலை பார்க்கிறது. குழந்தையை வெளியில் செல்லும்படி பிதுக்கி விட்டுவிட்டு மறுபடியும் சுருங்க ஆரம்பிக்கிறது. பின்னர் சில வாரங்களுக்குள்ளேயே அது தன்னுடைய யதார்த்த நிலையை அடைந்துவிடுகிறது.

ஆணினுடைய விதைப் பையிலிருந்த குழாய் மூலம் விந்து வெளியேறி பெண்ணின் யோனித்துவாரத்தை அடைகிறதென்று பார்த்தோம். ஆனல் பெண்ணுக்கு அண்டகோசத்திலிருந்து முட்டையை கருப்பைக்குக் கொண்டுவர எவ்வித நேரடி இணைப்பும் கிடையாது.

கருப்பை அத்திப்பழம் போன்ற வடிவ அமைப்புக் கொண்டது. முன்னும் பின்னும் சப்பட்டையாக உள்ளது.

அதனுடைய கனத்தைவிட அகலம் அதிகம். சப்பட்டையான கருப்பையின் மேல்பாகத்தின் இருபுறத்திலும் இழை போன்ற சிறு கொடிகள் படர்ந்துள்ளன. இந்த நூல் போன்ற மிகச் சிறிய குழாய்கள் நாலா பக்கங்களிலும் சலனம் செய்யக்கூடியவை. உறிஞ்சி இழுக்கும் சக்தி பெற்றவை. அண்டகோசத்திலிருந்து முட்டை வெடித்து வெளிக் கிளம்பியவுடன் அதன் சமீபமாக விரிந்து கிடக்கும் இந்த இழைபோன்ற குழாய்கள் முட்டையை உறிஞ்சி இழுத்து கர்ப்பப் பைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன.


பெண்ணின் தாது முட்டையானது அண்டகோசத்திலிருந்து கர்ப்பப்பைக்கு வரும் வழியில் ஆணினுடைய விந்து அணுவைச் சந்தித்தால் ஆணின் அணு, முட்டையை உடைத்துக்கொண்டு உட்செல்லுகிறது. அணுவை உட்கொண்ட முட்டை கர்ப்பப்பையில் போய் கருவாக வளரத் தொடங்குகிறது. இந்தச் சந்திப்பும் ஊடுருவுதலும் நிகழாமலும் போகும். அப்போது முட்டையானது கருப்பப் பைக்குள் சென்று எவ்விதப் பிரயோசனமும் அடையாமல் பெண்ணின் யோனித் துவாரத்தின் வழியாக கழிவுப் பொருளுடன் வெளியேறிவிடுகிறது.

பெண்ணுக்கு மிகவும் உணர்ச்சியின்பத்தைக் கொடுக்கக்கூடிய உறுப்புகள் ஒரு பகுதி பார்க்கக்கூடியனவாகவும் மற்றொரு பகுதி மறைமுகமாகவும் அமைந்திருக்கின்றன. ஆணைவிட பெண்ணுடைய அவயவங்கள் வெவ்வேறு விதமான பிணைப்புகளுடன் அமைந்துள்ளன. பெண் குறியின் மேல்பாகம், அதாவது மயிர்களுடன் கூடிய வெளி மடிப்பு மிகவும் குறைவான உணர்ச்சியை உடையது. இந்த மடிப்புகளால் பாதுகாக்கப்பட்டு, மடிப்புக்கு உட்புறம், முன்பக்கமாக ஒரு முக்கியமான உறுப்பு அமைந்திருக்கிறது. அதனுடைய உருவ அமைப்பும் அளவும் ஒரு பட்டாணிக் கடலையைப் போன்றது. சில குறிப்பிட்ட அளவு

மேலும் கீழும் அசையும் தன்மைபெற்றது. அதனுடைய பெயர்தான் பெண்யுளகம். மன்மதபீடமென்றும் சொல்லு வார்கள். ஆங்கிலத்தில் Clitoris எனப்படும். இதை ஈரப் பசையுள்ள மிக மிக மெல்லிய ஜவ்வு மூடியிருக்கிறது. இது தான் பெண்ணுக்கு மிகவும் அதிகமான உணர்ச்சி யின்பத்தை அளிக்கக்கூடியது. ஆண் லிங்கம் எவ்வித மெல்லிய சதையால் அமைக்கப்பட்டிருக்கிறதோ அதே போன்ற மெல்லிய சதையாலானதுதான் இந்தக் கருவியும். சம்போக காலத்தில் ரத்தவோட்டம் அதிகப்பட்டு இது விம் மிப் புடைத்திருக்கும். சம்போக காலத்தில் இதன்மீது ஆண்குறி உராயும்பொழுது மிக உயர்ந்த இன்பத்தை அடை கிருள். இன்ப சிகரத்தின் பெருக்குக்காகவே அமைக்கப் பட்டது இந்த அவயவம்.

மேல் மடிப்புக்கு அடுத்தபடியாக உள்ளே மற்றும் இரு சிறு மிருதுவான மடிப்புகள் அமைந்துள்ளன. இந்த மடிப்புகள் பெண் லிங்கத்தின் முன்பாக வந்து இணைந்து, அதற்கு மற்றுமொரு பாதுகாப்பு அரணுக விளங்குகின் றன. இந்த மடிப்புகள் பெண் லிங்கத்திற்கு அடுத்தபடியாக உணர்ச்சியளிக்கக் கூடியவை.

இந்த மடிப்புகளின் நடுக்கோட்டில், லிங்கத்திற்கு சற்று கீழ்ப்புறமாகத்தான் மூத்திரத் துவாரம் அமைந் துள்ளது. இதற்கும் கீழே, மடிப்புகளின் நடுமையத்தில் தான் யோனித்துவாரம் இருக்கிறது. கன்னிகழியாத சமயம் அதாவது புணர்ச்சி அறியாத காலத்தில் இந்தத் துவாரத்தை ஒரு மெல்லிய வட்டமான ஜவ்வு இழுத்து மூடிக் கொண்டிருக்கிறது. எனவே யோனித்துவாரத்தின் சுற் றளவு பார்வைக்கு குறுகியதாகத் தென்படும். முதல் சம்போக காலத்தின்போதோ' அல்லது படிப்படியாகவோ இந்த ஜவ்வு கிழிந்து, விரிந்து யோனித்துவாரத்தின் சுற் றளவை விரிவுபடுத்துகிறது. யோனித் துவாரத்தில் அமைந் துள்ள மெல்லிய ஜவ்வும் பெண் லிங்கத்திற்கு சரிசமமான இன்ப உணர்ச்சியைக் கொடுக்கக் கூடியது.




உள் அமைப்பு

1. வெளி மடிப்பு
2. பெண் லிங்கம்
3. உள் மடிப்பு
4. மூத்திரத் துவாரம்
5. யோனித் துவாரத்தின் வெளி விளிம்பு
6. யோனித் துவாரத்தின் உள்பக்க சுருக்கம்
7. யோனித் துவாரம்
8. மசக்குச் சுரபி

இவற்றைத் தவிர பெண்ணுக்கு இன்பங் கொடுக்கக் கூடியவை ஸ்தனங்களும், உதடுகளும் ஆகும்.

யோனித் துவாரத்தின் இரண்டு பக்கங்களிலும் ஒருவித நுண்ணிய சுரபிகள் அமைந்துள்ளன. இவைகளிலிருந்து வழவழப்பான நீர் சுரந்து, சம்போக காலத்தில் யோனித் துவாரத்தில் மசகாக உபயோகப்படுகிறது. இந்த வழவழப்

புத்தான் ஆண்குறியை பெண்குறிக்குள் நுழைப்பதற்கும், உராய்வதற்கும், ஏதுவாக இருக்கிறது.

பெண்ணினுடைய அண்டகோசங்களும், ஆணினுடைய விதைக் கொட்டைகளும், முட்டையையும் விந்துவையும் தருவதாக முன்பு கூறினோம். இதைத் தவிர இன்னும் இரண்டு வேறு விதமான முக்கிய வேலையையும் செய்கின்றன.

இவை வேறு விதமான ரசாயனப் பொருளையும் உற்பத்தி செய்து கொடுக்கின்றன. அந்தத் திரவம் ரத்தக் குழாய்களில் பாய்ந்து ரத்தத்தின் ஒவ்வொரு துளியிலும் கலந்து, உடம்பு முழுவதிலும் பரவி, உடம்பில் ஒருவித சக்தியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது.


பருவகாலம் வந்ததும் இந்த ரஸாயன உற்பத்தி ஆரம்பமாகிறது. இதன் மூலம்தான் பையன் வாலிபம் அடைந்து, உடம்பிலே புதுவித கட்டுக்கோப்பு பெற்று, புதிதாகச் சில இடங்களில் ரோமம் துளிர்த்து, பெண் சேர்க்கையை விரும்பும் மனப்பான்மையும் பெறுகிறான் பருவகாலம் வந்து உடலின் கட்டுக்கோப்பு ஆண் தன்மை பெறுவதற்கு முன்னர், ஒருவனுடைய விதைக் கொட்டைகள் அகற்றப்பட்டு விடுமானால் அந்தச் சிறுவன் மறுபடியும் என்றென்றுமே ஆண்மையுள்ள மனிதனாக வளர்ச்சியடையமாட்டான். மீசையும், தாடியும் குரலில் கனமும் ஏற்படாது. முற்றிலும் அலியாகிறான். ஆனால் பருவ வளர்ச்சி வந்த பின்னர், வியாதி அல்லது வேறு காரணங்களால் அப்புறப்படுத்தப்பட்டால் சரீரவெளி அமைப்பும், பெண்ணிடம் இன்பம் அனுபவிக்க வேண்டுமென்ற விருப்பமும் முற்றிலும் பாதிக்கப்பட்டு விடாது. ஓரளவு குறையும். ஆனால் சம்போகம் செய்யும் சக்தியும் கரு உற்பத்திக்கான ஜீவ விந்து உற்பத்தி செய்யும் சக்தியையும் இழந்து விடுவான்.

## அண்ட கோசம்

பெண்ணுடைய அண்டகோசத்திற்கும் (OVARY) இதேமாதிரியான ரஸாயன திரவத்தை உற்பத்தி செய்யும் சக்தி இருக்கிறது. இந்த உற்பத்தியின் மூலம், பெண்ணினுடைய குரல் முற்றிலும் மாறுபடாவிட்டாலும்கூட இன்னும் தீர்க்கம் பெற்று பெண் தன்மையை அடைகிறது. தனங்கள் புடைத்தெழுகின்றன. உரோமங்கள் புதிய இடங்களில் முளைக்கின்றன. உருவமும் முற்றிலும் பெண்ணுக்குரிய லட்சணம் பெறுகிறது. பூப்பெய்தி மாதந்தோறும் வீட்டிற்கு விலக்காகிருள். சம்போக ஆசையையும், சக்தியையும் பெறுகிருள். இந்த அண்டகோசங்கள் பெண் பருவமடையுமுன்னரே நீக்கப்பட்டு விட்டால் வளர்ச்சியும் மாறுதலும் பாதிக்கப்படுகிறது. ஆனல் பருவமடைந்த பின்னர் நீக்கப்பட்டால் குழந்தைப் பேறும் சம்போக சக்தியும் மட்டும் இல்லாமல் போய்விடும்.

பருவமடையாமல் இருக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும், வைத்திய முறை மூலம், இந்த சக்தியை உண்டாக்க முடியும். படிப்படியாக பால்வேறுபாட்டின் உள்ளக் கிளர்ச்சியையும் உண்டாக்க முடியும். ஆனல் குழந்தை பெறும் தன்மையை அடையமாட்டார்கள்.

அண்டகோசத்தில் முட்டை, அணுக்கள் நிறைந்திருக்கின்றன என்று முன்னமே கூறினேம் பருவமடைந்த பின் இந்த முட்டைகள் மாத்திரம் ஒன்று அல்லது இரண்டு வீதம் வளர்ச்சியடைகின்றன. இந்த முட்டைகள் ஒருவித மெல்லிய ஜவ்வினல் மூடப்பட்டிருக்கின்றன. முட்டை வளர ஆரம்பித்தவுடனே அதை மூடியுள்ள இந்த உறையும் உடன் வளர ஆரம்பித்து, முட்டையை அண்டகோசத்தின் மேல்புறமாகக் கொண்டு வருகிறது. அண்டகோசத்தின் மேல் மட்டத்திற்கு வந்ததும் இந்த உறை வெடித்து விடுகிறது. முட்டை அதிலிருந்து விடுபட்டு




முட்டையும் விந்தும் கலத்தல்

1. முட்டை அண்டகோசத்திலிருந்து வெடித்துக் கிளம்புதல்.
2. முட்டை கருப்பைக் குழாயை அடைதல்.
3. முட்டையை விந்து ஊடுருவிக் கலத்தல்.
4. ம்(5)ம் முட்டை வளர ஆரம்பித்தல்.
6. கருப்பையின் சுவர்.

பக்கத்திலுள்ள சினையிருப்புக் கொடிகளால் இழுக்கப்பட்டு கர்ப்பப் பைக்கு வந்து சேருகிறது. இப்பொழுது இங்கே இன்னொரு சம்பவமும் நிகழுகிறது.

முன்னர் முட்டையைச் சூழ்ந்திருந்த உறை வெடிக்கும் பொழுது, அது வேறொரு விதமான அணுக்களை முட்டையிடம் விட்டுவிட்டுச் செல்லுகிறது. முட்டை ஆணினுடைய விந்தை உட்கொள்ளாவிட்டால் இந்த அணுக்கள் செத்து மறைகின்றன. முட்டைக்குள் ஆணினுடைய விந்து உட்புகுந்துவிட்டால், இந்த அணுக்கள் முட்டை

யைச் சுற்றி மற்றொரு தடுப்புக் காவல் சுவரை உற்பத்தி செய்கின்றன. முட்டை கருவுற்று வளரும்போது அதைச் சுற்றி இந்தப் புதிய உறையும் வளருகிறது. கர்ப்பப் பையிலிருந்து அந்தக் காலத்தில் உண்டாகும் ஒருவித திரவம் இந்த உறையில் கருவுடன் சேர்ந்து வளருவதற்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கிறது. இந்தப் புதிய உறைக்குப் பெயர்தான் பனிக்குடம். இதன் மூலந்தான் தாயினுடைய ரத்தத்திலிருந்து குழந்தைக்கு வேண்டிய உணவும் பிராண வாயுவும் கிடைத்து வருகிறது. குழந்தை பிறக்கும் காலத்தில்தான் இந்த பனிக்குடம் உடைந்து பெருகுகிறது.

சில பெண்களுக்கு அடிக்கடி காய் விழுவதுண்டு. அதாவது இந்தப் பனிக்குடம் வளருவதற்குரிய ரஸாயன திரவத்தை கர்ப்பப்பை உற்பத்தி செய்யாததே அதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

## விந்தும் முட்டையும் கூடுதல்

ஆணிடமிருந்து உற்பத்தியான விந்துவுக்கு ஊர்ந்து செல்லும் சக்தி இருக்கிறது. பெண்ணின் யோனித் துவாரத்தின் வழியாக கர்ப்பப் பைக்கும், அதனுடைய இரண்டு பக்கங்களிலுமுள்ள குழாய்களுக்கும் செல்லுகின்றன. ஒரு தடவை வெளியிடப்படும் ஆணினுடைய சுக்கில நீரில் 2 கோடியிலிருந்து 5 கோடிவரை ஜீவ விந்துக்கள் நிரம்பியிருக்கின்றன என்று முன்பே பார்த்தோம். இந்த விந்துக்களில் ஒன்றே ஒன்றுதான் முட்டையைத் துளைத்து உட்சென்று கருவாக்குகிறது. மனிதவர்க்கம் நீடித்து நிலைத்து இருக்கவேண்டும் என்பதில் இயற்கைக்கு எவ்வளவு ஆவல் பார்த்தீர்களா? அதோடு மட்டுமா? தான் படைக்கும் ஜீவ விந்துக்களிடம் இயற்கைக்கு எவ்வளவு அவநம்பிக்கை பார்த்தீர்களா? ஒன்றையோ இரண்டையோ படைத்துப் போய்ப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று விட்டுவிடவில்லை. கோடிக் கணக்கான விந்துக்களை

விட்டு முட்டையின் சுயம்வர மண்டபத்திற்கு அனுப்பு கிறது இயற்கை.

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா இறைவா!" என்று பாடினார் பாரதியார். "எத் தனை கோடி விந்து வைத்தாய் எங்கள் இறைவா இறைவா!" என்று பாடினாலும் பொருந்தும் போலிருக்கிறது.

விந்து முட்டைக்குள் நுழைந்த உடனேயே அதனு டைய வால் அறுந்துவிடுகிறது. மறுபடியும் வேறொரு விந்து நுழைந்து விடாதபடி, முட்டையைச் சுற்றிலும் ஒரு உறை வளருகிறது. இந்தக் கருக் கலப்பு முறை அநேக மாகப் கருப் பையின் இரு பக்கக் குழாய்களில் ஏதாவது ஒன் றில்தான் உண்டாகிறது. அங்கிருந்து மறுபடியும் சூலுற்ற முட்டை படிப்படியாக நகர்ந்து கருப் பைக்கு வந்துவிடு கிறது. அப்படி வராமல் குழாய்களிலே தங்கி வளர ஆரம் பித்தால் அபாயம் நேரிடுகிறது. தாய்க்கோ கருவுக்கோ அல்லது இருவருக்குமோ உயிர்ச் சேதம் நேரிடக்கூடும். இப்படி நிகழ்ந்திருந்தால், கேந்திர ரத்தக்குழாய் முறிந்து ரத்தம் கொட்ட ஆரம்பிக்கும். இவ்வித சிக்கலான நிலைமை மிகவும் அபூர்வமாகத்தான் ஏற்படும். இந்த நிலைமை ஏற் பட்டவுடனே, ஆரம்பத்திலேயே கண்டு பிடித்து ஆபரே ஷன் மூலம் குணப்படுத்திவிட முடியும்.

சிற்சில சமயங்களில் ஒரே சமயத்தில் இரண்டு முட்டை கள் வெளியாகி, அவற்றை இரண்டு வெவ்வேறு விந்துகள் ஊடுருவி வளர்ந்தால் இரட்டைக் குழந்தைகள் உண்டா கின்றன. அவைகள் எந்தப் பால் வேறுபாட்டையும் உடையனவா யிருக்கலாம். ஆனால் கருவுற்ற ஒரே முட் டைக்குள் இரண்டு பிரிவு ஏற்பட்டால், அப்போது உண் டாகும் இரட்டைப் பிள்ளைகள் ஒரே இனத்தைச் சேர்ந்தன வாகவும், வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாத அளவு ஒரே அங்க அடையாளத்தை யுடையதாகவும் அமையும்.

சிலர் தம் மனைவி வெறும் பெண் குழந்தையாகப் பெற்றுத் தள்ளுகிறாள் என்று அங்கலாய்த்து, ஒரு மாதிரி வெறுப்பாக நடத்துவதைப் பார்க்கிறோம்.

குழந்தை ஆணாகவோ பெண்ணாகவோ பிறப்பதற்கு அவளல்ல காரணம். அதற்கு முழுக்காரணமும் ஆணிடமே இருக்கிறது. ஆண் கொடுக்கும் விந்துதான் குழந்தையாக வளர்கிறது. புருஷன் கொடுக்கும் அந்தக் கருவை—அது ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும்—பெண் தனது முட்டைக்குள் பத்திரமாக அடைத்து, கர்ப்பப் பைக்குள்வைத்து வளர்த்து, வெளி உலகத்துக்குக் கொடுக்கிறாள். இப்படியிருக்க அவளைக் கோபித்து என்ன பிரயோசனம் ?

ஆணினுடைய விந்தில் எக்ஸ் (X) என்றும் ஒய் (Y) என்றும் இரண்டு விதம் உள்ளன. எக்ஸ் அணு அண்டத்தைப் பிளந்து புகுந்தால் பெண்ணாகவும் ஒய் புகுந்தால் ஆணாகவும் குழந்தை பிறக்கும்.

## சிலேட்டுமச் சுரபி

மனிதர்களின் உடலில் பற்பல விதமான சுரபிகள் அமைந்திருக்கின்றன. அவற்றிலிருந்து ரஸாயன திரவம் உற்பத்தியாகி ஒவ்வொரு விதமாகப் பயன்படுகின்றன.

உதாரணமாக கபாலத்திலே ஒரு சுரபி அமைந்திருக்கிறது. இது மூளைக்கு அடிப்புரத்தில் ஒரு கொண்டைக் கடலையளவு பருமனில் இருக்கிறது. இதற்குப் பெயர் சிலேட்டுமச் சுரபி (Pitutary Gland) இது பல்வேறு விதமான வேலைகளைச் செய்கிறது. இதிலிருந்து சுரக்கும் ஒரு விதச் சக்தியினால்தான் பெண்ணினுடைய அண்டகோசத்தில் தேங்கிக் கிடக்கும் முட்டைகள் மாதந்தோறும் வளர்ச்சியடைந்து வெடித்துக் கிளம்புகின்றன. ஆணினுடைய விந்து உற்பத்தியும் நடைபெறுகிறது. மற்ற சுரபிகளுக்கெல்லாம் காரண கர்த்தாவாக விளங்கி ஊக்குவித்து

நடத்தி வைப்பதும் இதனுடைய வேலையே, சில சமயங்களில் இந்தச் சிலேட்டுமச் சுரபி மிகவும் தீவிரமாக வேலை செய்வதால்தான் ஒரு மனிதனோ அல்லது பெண்ணோ அதிகமான காம இச்சையை யுடையவர்களாக இருக்கிறார்கள். அதேமாதிரி இதனுடைய வேலை மந்தப்பட்டால் இதற்கு நேர் விரோதமான நிலைமை ஏற்படுகிறது. "இல்லறத் துறவி" யாகிறார்கள்.

இதைத் தவிர மனிதனுடைய சரீர வளர்ச்சியையும் இது பாதிக்கிறது. ஒரு மனிதன் பிரம்மாண்டமான பூதாகாரம் அடைவதும், சித்திரக்குள்ளனாக விளங்குவதும் இதனுடைய வேலை முறையைப் பொறுத்திருக்கிறது. ஒரு மனிதன் சித்திரம், சிற்பம் சங்கிதம், இலக்கியம், விஞ்ஞானம் போன்ற ஆக்க வேலைகளிலும் நுண்கலைகளிலும் திறமையாக ஈடுபடுவதற்கும் இந்த 'ஹார்மோன்' என்ற ரசாயனத் திரவமே காரணம்.

## சிறுநீர்ச் சுரபி (Suprarenal Gland)

மற்றொரு முக்கியமான சுரபி சிறு நீர்ச்சுரபியாகும் இது மூத்திரப் பைக்கு மேலே அமைந்திருக்கிறது. எனவே இதற்கு இந்தப் பெயரைக் கொடுத்திருக்கிறேன். இது ஆணினுடைய விதைக் கொட்டைகளையும், பெண்ணினுடைய அண்ட கோசத்தையும் நேரடியாக கண்காணிக்கிறது.

ஒருவருடைய சிறுநீர்ச்சுரபி, பையன் சரியான பருவம் அடைவதற்கு முன்னரே வளர்ச்சியடைந்து விடுமானால் அவன் சிறு வயதிலேயே சம்போக இச்சையும் செயலும் உடையவனாகிறான். அகற்றி விடுவதன் மூலம் சிறுவனுடைய யதார்த்த நிலைமையை சிருஷ்டிக்கலாம்.

பெண்ணுக்கு, இது அதிகமாக வேலை செய்யுமேயானால் அவளுடைய பெண் தன்மையில் சில அற்றுப்போய் விடுகின்

றன. உடல் ரீதியாகவும் உள்ள ரீதியாகவும் ஆண் தன்மைகள் உண்டாகி விடுகின்றன.

இதேமாதிரி கழுத்தில் ஒரு சுரபியிருக்கிறது. அதன் பெயர் கேடயச் சுரபி (Thyroid Gland) இதுவும் மனிதருடைய உடலமைப்பிலும் உள்ளப் பண்பிலும் ஓரளவு ஆட்சி செலுத்துகிறது.

மனிதருடைய உடம்பில் மறைமுகமாக வேலை செய்யும் எல்லாவித சுரபிகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒழுங்கான கட்டுக்கோப்பில் வேலை செய்வதால்தான் மனிதனுடைய வளர்ச்சியும் ஒழுங்காக அமைகிறது. ஏதாவது ஒன்று ஏறுமாருனல் கோளாறு ஏற்பட்டுவிடுகிறது.

ஒரு ஆணையோ பெண்ணையோ பார்த்து அந்த மனிதரிடம் "மனக்கட்டுப்பாடும் ஒழுக்கமுமில்லை" என்று குற்றம் சாட்டுகிறோம். அதனுடைய உண்மையான காரணம் இந்தச் சுரபிகளின் மிகைப்பட்ட வேலையேயாகும்.

உதாரணமாக ரஷ்யாவில், கல்யாணமாகி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் விவாகரத்து செய்துகொள்ள உரிமையுண்டு. ஆனல் இந்த சட்டத்தை அனுகூலமாகப் பயன்படுத்திக் கொண்டு. கணவனையோ மனைவியையோ அடிக்கடி மாற்றிக் கொண்டே இருப்பவர்களை பரிசோதனை செய்து பார்த்து, இந்தச் சுரபிகளை ஆபரேஷன் மூலம் சரியாக அமைத்து "நல்ல குணத்தை" உண்டாக்கிவிடுகிருர்கள்.

ஒரு சிலர் வறுமையின் காரணமாக விபசாரத்தை தொழிலாக நடத்துகிருர்கள். ஆனல் எவ்விதக் குறைவுமில்லாத போது "ரகம்" பார்த்துத் திரியும் ஆணையோ பெண்ணையோ இந்த ஆபரேஷன் முறையின் மூலம் குணப்படுத்த முடியும்.

# புணர்ச்சி

ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலமைப்பு முறையில் மிக்வும் வித்தியாசம் இருப்பதைப் பார்த்தோம். அதே மாதிரி இருசாராரிடத்திலும் இன்ப நுகர்ச்சியின் உணர்ச்சியும் வெவ்வேறு அளவில் வித்தியாசப்படுகிறது.

பெண்ணைவிட ஆணுக்கு உணர்ச்சி சீக்கிரம் உண்டாகி விடுகிறது. சந்தர்ப்பம் ஏற்பட்டவுடனேயே ஒரு ஆண் சம்போக இச்சை எழும்பி. புணர்ச்சிக்குத் தயாராகி விடுகிறான். அவனுடைய அவயவங்கள் துரிதமாகத் தயாராகி விடுகின்றன. அதேமாதிரி சம்போக உச்சநிலையும் அவனுக்குத் துரிதமாக ஏற்பட்டுவிடுகிறது. ஆணுக்கு சம்போக உச்சநிலை என்பது விந்து வெளியாகும் தருணமேயாகும்.

ஆனால் பெண்ணுக்கு அப்படியல்ல, அவளிடம் சம்போக விருப்பம் இருந்தாலும்கூட சம்போக உணர்ச்சி உடனே ஏற்பட்டுவிடுவதில்லை, மிகவும் மெதுவாகப் படிப்படியாகவே உண்டாகிறது. அவளுடைய சம்போக உச்சநிலை மிகவும் மெதுவாக கடைசியில்தான் உண்டாகிறது. சில சமயங்களில் இந்த உச்சநிலை ஏற்படாமலே போனாலும் போகும். அப்படி உச்சநிலை ஏற்படாமல் போய்விட்டால் பெண்ணுக்கு அதிருப்தி ஏற்படுகிறது. சில சமயங்களில் சம்போக உச்சநிலை யெல்லாம் அடைந்துவிட்டு. ஆண் தூங்க ஆரம்பிக்கும்பொழுதுதான் பெண்ணினுடைய உணர்ச்சி உச்சநிலையை அடைய ஆரம்பிக்கலாம். சம்போக காலத்தில் ஆண் பெண் இருபாலரும் தங்களை, நிலைமைக்குத் தக்கவாறு சரிசெய்துகொண்டு ஏககாலத்தில் உச்சநிலையை அடையப் பாடுபட்டு வெற்றியடைய வேண்டும். அப்படியானால்தான் சம்போக இன்பம் இருபாலார்க்கும் மிகவும் திருப்தியும், பரிபூரண மன நிம்மதியையும் உடல்நலத்தையும் கொடுக்கும்.

எனவே பெண்ணின் சம்போக உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதற்காக, ஆண் தன்னுடைய துரித இச்சையை அடக்கிக்கொண்டு, ஆரம்பக் கேளிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

பொதுவாக சம்போக காலத்தை மூன்று கட்டங்களாகப் பிரித்துக் கொள்ளலாம். (1) கேளிக்கை, (2)புணர்ச்சி (3) உச்சநிலை.

## *(1)* கேளிக்கை நிலை

பொதுவாக நமது குடும்பங்களில் பல தம்பதிகளுக்கு படுக்கையறை வசதி கிடையாது. சுயேச்சையாக, எவ்விதத் தொந்தரவுமில்லாமல் மனம் போனபடி யெல்லாம் கூடிக் குலவி மகிழ சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. நட்டநடுநிசியில் தூங்கிக்கொண்டிருக்கும் மனைவியை எழுப்பி "கோழிப் புணர்ச்சி" முடித்துவிட்டு முடக்கிக்கொள்ளும் தம்பதிகள் தான் அதிகம். ஏழைகளிடம்தான் இப்படி யென்றால் வீட்டு சைதியும் தனிமையும் உடைய தம்பதிகளிடமும் இந்தப் பழக்கம் நிலவி வருகிறது. ''விளக்கை அணைத்து விட்டால்தான் கிட்ட நெருங்க முடியும்'' என்று சத்தியாக்கிரகம் பிடிக்கும் பெண்கள் அநேகர். கட்டிய கணவனுடன் தனியறையில் நிர்வாணமாக இருக்க வெட்கப்படும் பெண்கள் இல்லாமலில்லை. வெட்கம் என்ற திரைக்குப் பின்னால் மடமை புரிகிறார்கள்.

கேளிக்கைகள் புரிந்து மகிழும் முதல் கட்டம்தான் பெண்ணினுடைய உணர்ச்சியை எழுப்பிவிடுகிறது.

இந்தக் கேளிக்கைகளில் குரல், பார்வை, ஸ்பரிசம் ஆகிய யாவும் முக்கியம் பெறுகின்றன. சம்போக எண்ணத்துடன் அந்த மனோநிலையில் உண்டாகும் பேச்சின் தொனிப்பிலேயே ஒரு புதுவிதமான ஆகர்ஷண சக்தி அமைகிறது; அந்த சக்தியே பெண்ணின் உணர்ச்சியை

எழுப்பிவிட ஹேதுவாக இருக்கிறது. ஆண் சிற்சில வித மான கேளிக்கைப் பேச்சின் மூலம் பெண்ணின் சம்போக உணர்ச்சியின் நிலையை உயர்த்த முடியும். அவனுடைய வார்த்தைகளில் நிரம்பியுள்ள அர்த்தம் பெண்ணின் நரம்பு களில் ரத்த வோட்டத்தால் கதகதப்பையும், உணர்ச்சிப் பெருக்கையும் உண்டாக்குகிறது அதேமாதிரிதான் கண் பார்வைகளும் காட்சியும் ஆணின் மனதில் பொங்கிக் கொப்பளிக்கும் எண்ணங்கள் கண் வழியே, பெருகுவதைக் கண்டு பெண் புரிந்துகொள்கிருள். அந்தப் பரர்வையே அவளுடைய உள்ளத்தில் காமக்கனலை மூட்டுகிறது. உதாரணமாக.

''கண்களவு கொள்ளும் சிறுநோக்கும் காமத்தில்
செம்பாகம் அன்று : பெரிது ''

(களவியல் குறிப்பறிதல் அதிகாரம்)

(கண்ணுல் நோக்கி களவு கொள்ளுகின்ற சுருங்கிய பார்வை காமத்தில் சரிபாதியல்ல. அதையும்விட அதிகம்.)

''கண்ணெடு கண்இணை நோக்கு ஒக்கின்
வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல.''

(கண்களோடு கண்கள் பார்த்து அன்பு புரியுமானல் வாய்ச்சொற்கள் தேவையுமில்லாமல் போய்விடுகின்றன) என்கிருர் திருவள்ளுவர்.

நிர்வாணக்கோல நிலையில் ஆணும் பெண்ணும் ஒரு வரை ஒருவர் பார்த்து, அங்க அமைப்புகளை ரஸித்து தொட்டு அனுபவிக்கும்பொழுது, உள்ளக் கிளர்ச்சி மிக மிக அதிகமாகி சம்போக உணர்ச்சி இன்னும் உயர்ந்த நிலையை அடைகிறது. பெண்ணினுடைய உணர்ச்சிப் பெருக்கை அதிகப்படுத்த இது மிகவும் உபயோகப்படு கிறது. ஆனல் சாதாரணமாகவே அதிகமான உணர்ச்சியை அடையக்கூடிய ஆண் தன் மனேநிலையைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் துரித ஸ்கலிதத்தில்

முடிந்து பெண்ணோடு சரிசமமாக உச்சநிலையை அடையா மல் போய்விட நேரிடும்.

ஸ்பரிச உணர்ச்சியென்பது சம்போக காலத்தில் உச்ச நிலையை அடைவதற்கு மிகவும் உதவிபுரிகிறது. மனிதர்க ளுடைய தேகத்தில் பற்பல இடங்களில் காமக்கிளர்ச்சியை அதிகப்படுத்தக்கூடிய சக்தி இருப்பதை முன்னரே கூறி யுள்ளோம். பெண்ணின் உடலில் உதடுகள், ஸ்தனங்கள் காதுத் தண்டுகள் போன்ற பல குறிப்பிடத்தக்க இடங்கள் உள்ளன ஒவ்வொருவருக்கும் எந்தெந்த இடங்களில் 'இன்ப நிலை' இருக்கிறதென்று பழக்க அனுபவத்தால் தெரிந்துகொண்டு ஆண் அவ்வித கேளிக்கைகளைச் செய்ய வேண்டும். உதாரணமாகச் சில பெண்களின் ஸதனங்களை வருடுவதிலும், நரம்புகளை நிரடுவதிலும் இந்த உணர்ச்சிப் பெருக்கு ஏற்படுகிறது. சிலபெண்கள் தங்கள் உள் தொடை களில் ஆண் கவ்விக் கடித்து விளையாடுவதிலே அளவிறந்த இன்பம் அடைகிறார்கள். கேளிக்கை காலத்தில் ஆண் உள் ளத்தில் என்னென்ன செய்யவேண்டுமென்று விருப்பம் எழுகிறதோ அவையெல்லாம் செய்து இருபாலாரும் உணர்ச் சிப் பெருக்கையடையலாம். கேளிக்கைகளில் பெண் ணுக்கு எது பிடிக்கிறது என்று தெரிந்துகொள்வதுதான் முக்கியம். கேளிக்கையின் உச்சக் கட்டத்தில் உடம்பில் எல்லா இடத்திலும் இன்ப சக்தி பரவிப் பாய்ந்து பற்றி எரிகிறது. அப்பொழுது தொட்ட இடமெல்லாம் இனிக்கத் தான் செய்யும்.

ஆணினுடைய உடம்பில் உணர்ச்சியும் மென்மையும் நிரம்பிய இடம் ஆண் லிங்கமாகும் தோல் மடிப்புக்குள் இருக்கும் ஆண்குறியின் நுனிப்பாகம், இதை மலர் என் றும் சொல்வதுண்டு. இது கேளிக்கை காலத்தில் அதிகமாக உராய்ந்துவிடாதபடி ஆண் பார்த்துக்கொள்ள வேண்டும்

இரண்டாவது கட்டமாகிய புணர்ச்சி நிலை, ஆண்குறி பெண்ணின் யோனித் துவாரத்திற்குள் நுழைக்கப்பட்ட

பின்தான் ஆரம்பமாகிறது. அப்படி நுழைக்கப்படும் இரண்டாவது கட்டத்திற்கு, முதல் கட்டமாகிய கேளிக்கை நிலை மிகவும் உதவி செய்கிறது. எப்படியென்று பார்ப்போம்.

ஆண்லிங்கம் மிகவும் மிருதுவான சதையாலானது. அதில் ஏராளமான ரத்த நாளங்கள் அமைந்துள்ளன. இந்த நாளங்களுக்கு நடுமத்தியில்தான் விந்து வெளிவரும் குழாயிருக்கிறது. சம்போக உணர்ச்சி கிளம்பிய உடனே இந்த ரத்த நாளங்களில் ரத்த ஓட்டம் அதிகப்பட்டு விம்மிப் புடைத்து உறுதியாய்விடுகிறது. விந்து குழாயில் மூத்திரப் பைக்குப் பக்கத்தில் இரண்டு சுரபிகள் அமைந்துள்ளன. இதற்குப் புரோஸ்டேட் சுரபி என்று பெயர். இதிலிருந்து பெரும் திரவம்தான் ஜீவ விந்துகளை சாகாமல் காப்பாற்றி வைக்கிறது. அதோடுமட்டுமன்றி இந்த சுரபிகள் வேறொரு வேலையும் செய்கின்றன. சம்போக காலத்தில் ஜீவ விந்துகள் பாய்ந்து பெருகுவதற்குரிய சுக்கிலத்தையும் சுரக்கிறது.

ஆண் லிங்கம் விடைப்பு ஏற்படாவிட்டால், அதாவது சாதாரணமாக இருப்பதைப்போன்று தொய்ந்து போய்க் கிடந்தால் பெண்ணின் யோனிக்குள் நுழைக்க முடியாது போய்விடும்.

அதே மாதிரி பெண்ணின் யோனித் துவாரத்தின் இரு பக்கங்களிலுள்ள சுரபிகள், வழவழப்பான திரவத்தைச் சுரப்பதற்கும் இந்தக் கேளிக்கைகள்தான் உதவி புரிகின்றன. இந்த வழவழப்பான பசை ஊறி யோனித் துவாரத்திற்கு மசகாக உபயோகப்படாவிட்டால், ஆணினுடைய விம்மிப் புடைத்த லிங்கம் யோனிக்குள் நுழைய முடியாது.

எனவேதான் சம்போக காலத்தின் முதல் கட்டமாகிய கேளிக்கை நிலை வற்புறுத்தப்படுகிறது. அதுவுமல்லாமல் இவ்விதம் கேளிக்கையும், மனம் ஒன்றிய அன்பு நிலையில்

தன்னை மறந்த நிலையில் ஆணும் பெண்ணும் குலவி மகிழ்ந்து ஆனந்தமடையாமல், எடுத்தவுடனேயே இரண்டாவது கட்டமாகிய புணர்ச்சி நிலையில் ஆரம்பித்து. விந்தை துரித மாக விட்டுவிட்டு 'அக்கடா' என்று போய்ப்படுப்பதில் இருவருக்கும் இன்பம் இல்லை. ஆணுக்கு வேண்டுமானால் உடல்வெறி கழிந்ததாக தற்காலிக சாந்தி ஏற்படலாம். ஆனால் திருப்தி இருக்க முடியாது. இப்படிப்பட்ட நிலையில் பெண்தான் மிகவும் பாதிக்கப்படுபவள். அவளுடைய ஆசை தணியாமல் மனத்திற்குள்ளேயே காரணம் தெரியாத குறையாக அமைந்து. மனம் நாளடையில் வேதனை அடைந்து, கலவியிலே வெறுப்புத் தட்டிவிடும். வாழ்க்கையில் சலிப்பு ஏற்படும். பொறுமையின்மையும் மனோவியாதியும். 'ஹிஸ்டீரியா' போன்ற வியாதிகளும் பெண்ணை பிடிக்கும்.

எனவே ஆணும் பெண்ணும் சரிசமமான இன்பத்தை அடைய ஒரே சமயத்தில் உச்ச நிலையை எய்த முதல் கட்டமாகிய கேளிக்கை நிலை மிகமிக அவசியம்.

## (2) புணர்ச்சிக் கட்டம்

பெண் போதிய அளவு உணர்ச்சி நிலையை அடைந்த பிற்பாடு, புணர்ச்சி நிலை ஆரம்பிக்கவேண்டும்.

புணர்வதில் பலவிதமான நிலைகள் இருக்கின்றன. உதாரணத்துக்குச் சிலவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

சாதாரண முறை:—புதிதாக மணமானவர்கள் முதல் முறை புணரும்போது இந்த நிலையே உகந்தது; ஏனெனில் இதுதான் மிகவும் சௌகரியமான முறை. மனைவி "மல்லாந்து" படுத்துக்கொண்டு தனது ஆடைகள் விரியும்படியாக கால்களை அகட்டிப் பரப்பிக் கொள்ளவேண்டும். மனைவியின் தொடைகளுக்கு நடுவே தனது இடுப்பு பாகம் படும்படியாக வைத்துக்கொண்டு இரண்டு முழங்கால்களை

யும் தரையில் ஊன்றி, தனது உடல்பாரத்தை மனைவியின் மீது சுமத்தி, சிரமம் கொடுக்காது தாங்கிக் கொள்ளவேண்டும். ஆண் லிங்கத்தை யோனிக்குள் நுழைத்த பின்னர், பெண் தனது, தொடைகளை நெருக்கிக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால் நெருக்கி ஒடுக்கிக்கொள்ளலாம். அப்பொழுது கணவனுடைய முழங்கால்கள் இரண்டும், மனைவியினுடைய கால்களுக்கு வெளிப்புறமாகப் பக்கவாட்டில் ஊன்றிக்கொண்டு, ஆண் தனது இடுப்பை ஆட்டுவதற்கு ஏதுவாக வைத்துக்கொள்ளவேண்டும். இதுதான் நீண்ட நேரம், சௌகர்யமாகப் புணர்ச்சி செய்வதற்கு ஏற்ற முறை.


மற்ற முறைகள் ஏராளமாக இருக்கின்றன. எனினும் குறிப்பிடத் தக்கவை ; பெண்மேல் முறை-பக்கவாட்டு முறை பின்புற முறை முதலியன, யாவும் சௌகரியத்தைப் பொறுத்தது.

ஆண் தனது லிங்கத்தை மெது மெதுவாக யோனிக்குள் நுழைக்கவேண்டும். இல்லாவிட்டால் இரண்டுவித சிரமம் ஏற்படலாம். ஒன்று பெண்ணினுடைய யோனித் துவாரம் சரியானபடி வழவழப்பும், விரிவும் அடையாமல் இருந்தால் பெண்ணுக்கு வேதனையை உண்டுபண்ணும். ஒரேயடியாக வேகமாக நுழைக்கும்போது, ஆணினுடைய லிங்கம் விரைவாக உராய்வதால் உணர்வு கலங்கி விந்து ஒழுக நேரிடக்கூடும். பரிபூரணமாக நுழைக்கப்பட்ட பின்னர் அதே நிலையில் சிறிது நேரம் வைத்துக்கொண்டு, வேறு புற வேலைகளில் ஈடுபடவேண்டும். அதரம் பருகுதல், முலை வருடுதல் நாவொடு நாவு துழாவுதல். பேசிச் சிரித்தல், முத்தம் பொழிதல், ஸ்தனம் சுவைத்தல் ஆகிய ஏதாவது ஒரு புறத்தொழிலில் ஈடுபடுவது நல்லது.

பின்னர், யோனிக்குள் இருக்கும் லிங்கமும், பெண் லிங்கத்தை நெருக்கிக்கொண்டிருக்கும் ஆண் குறித்தண்டும் மேலும் கீழும் சென்று உராயும்படியாக, இடுப்பை உயர்த்

தியும் தாழ்த்தியும் அசைவுகளை உண்டாக்கவேண்டும் பெண் லிங்கமாகிய 'கிளிட்டோரிஸ்' உராயவேண்டியது மிகவும் முக்கியம்.


ஆணுக்கு விந்து வெளிவந்து விடுமென்ற அறிகுறி உணர்ச்சி தென்பட்டால் அசைவுகளைக் கட்டுப்படுத்தி சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு மறுபடியும் ஆட்டவேண்



சரியான வழி

ஆண் குறி பெண் லிங்கத்தில் உராய்ந்தால்தான். பெண்ணினுடைய சம்போக இச்சை திருப்தி யடையும். இப் படத்தில் இவை இரண்டும் இணைந்து உராய்வதைக் கவனிக்கவும்.

டும். ஆண் இப்படித் தனது இந்திரியம் ஸ்கலிதமாகும் உச்ச நிலையைத் தாமதப்படுத்தி வரும்பொழுது. பெண் தன்னால் முடிந்த அளவு மனசை கலவியின்பத்தில் ஒர்முகப் படுத்தி தனது உணர்ச்சியை உச்சநிலைக்குக் கொண்டுவர பாடுபடவேண்டும். பெண் உச்ச நிலையை அடைய அடைய அவளுடைய கண் சொருகும். உடலிலே ஓர்வித துவள்தல் ஏற்படும். மூச்சிலே ஒருவித இயக்கமும் துடிப்பும் ஏற்படும். இந்த உச்சநிலையை அடைந்ததும் ஆண் தனது விந்தை



தவருன வழி

மேலேயுள்ள படத்தில் ஆண் குறிக்கும் பெண் லிங்கத்திற்கும் பிணைப்பு இல்லாமல் இடைவெளி இருப்பதைப் படத்தில் இரட்டை அம்புக் குறியிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

வெளிப்படுத்தி, தனது உச்ச நிலையையும் அடையவேண்டும். இந்தக் கட்டத்தில் பெண்ணினுடைய வாயமுதத்தில் ஆணினுடைய இதழ்களும் நாவும், மாறிமாறித் துளாவி இன்பம் ஏற்படுத்துவது இன்னும் கலவியின்பத்திற்குச் சிகரம் வைத்தாற் போலாகும்.

## கால அளவு

சம்போக காலத்தின் அளவு—முதல் கட்டத்திலிருந்து கடைசி வரையிலும் மூன்றிலிருந்து பத்து நிமிஷம் வரையிலும் போதுமென்று பலர் நினைக்கிறார்கள். சம்போக காலமென்று எதைக் குறிப்பிடுகிறீர்களென்று இவர்களைக் கேட்டால் இரண்டாவது கட்டத்திலிருந்துதான் ஆரம்பிக்கிறார்கள் என்று தெரிகிறது. இன்னும் சிலர், "எல்லாம் திறமையைப் பொறுத்தது. திறமைசாலி இரண்டே நிமிஷங்களில் பெண்ணுக்குத் திருப்தி செய்துவிடலாம்" என்று பீத்திக் கொள்ளுகிறார்கள். இந்த அபிப்பிராயம் மிகவும் தவறானது. "இந்த அசிங்கியமான நடவடிக்கைக்கு அவ்வளவு நேரம் போதாதா" என்ற கீழ்த்தரமான எண்ணத்திலிருந்து உதிப்பதாகும். இப்படி எண்ணுபவர்கள் பத்து நிமிஷத்தையே அதிகபட்ச நேரமாகக் கருதுகிறார்கள். உண்மையில் இது மிகவும் குறுகிய கால அளவு ஆகும். சாதாரணமாக பதினைந்து நிமிஷத்திலிருந்து ஒரு மணி நேரம் வரைக்கும்கூட சம்போக கால அளவு நிலைமைக்குத் தக்கவாறு அமையலாம். பதினைந்து நிமிஷத்திற்கு குறைந்த எந்த சம்போகமும் திருப்தியற்றதாகத்தான் இருக்க முடியும்.

இந்த கால அளவிலும் தப்புக் கணக்குப் போட நேரிடும். கேளிக்கை நிலையாகிய முதல் கட்டத்தில் அதிக நேரத்தைக் கழித்துவிட்டு, புணர்ச்சி நிலையாகிய இரண்டாவது கட்டத்திற்கு இரண்டொரு நிமிஷங்களை மட்டும் ஒதுக்கிவிட்டு, காரியம் திருப்திகரமாக முடிந்துவிட்டதாக மனப்பால் குடிக்கலாம்.

கேளிக்கை நிலையானது இரண்டாவது கட்டத்திற் கேற்ற முகவுரையாக அமையவேண்டும். கேளிக்கையின் போது பெண்ணின் சம்போக உணர்ச்சி உயர்த்தப்பட்டு. சுரபிகள் திரவம் பெருக்க ஆரம்பித்து. யோனி வழவழப் பாகி இரண்டாவது நிலைக்கு முன்னேற்பாடுகள் செய்கிறது. ஆனால் அதன்கால அளவை அநாவசியமாக நீட்டிக்கொண்டு போனால் மீண்டும் உணர்ச்சி குன்ற ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கலாம். நடைமுறையில் யோனியும் ஆண் குறி யும் இணையும் பொழுதுதான் பெண்ணினுடைய சம்போக உணர்ச்சியில் மிக உயர்ந்த புதுக்கட்டம் ஆரம்பமாகிறது. இதைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். முதல் கட்டத்தில் அதிக நேரத்தைச் செலவழித்ததும், ஆணி னுடைய உணர்ச்சி எல்லையை அடைந்து, யோனியில் லிங்கம் நுழைக்கப்பட்டதுமே விந்து வெளிவிட துடி துடிப்பு ஏற்படுகிறது. தன்னைப்போலவே பெண்ணும் முதல் கட்டத்தின் மூலம் உச்சநிலையை அடைந்து விட்ட தாகக் கருதுவது முற்றிலும் தவறானதாகும்.

பெண் உச்சநிலையை அடைய படிப்படியாகப் பல கட்டங்களைக் கடக்க வேண்டியதிருக்கிறது. ஆணுக்கு இப்படி ஏற்படுவதில்லை. ஆண் இரண்டே நிமிஷத்தில் உச்ச நிலையை அடைந்து திருப்தி ஏற்படுத்திக் கொள்ள முடியும். மிகவும் அபூர்வமான சந்தர்ப்பங்களில் அல்லா மல் பெண்ணுக்கு இவ்வளவு துரிதகால உணர்ச்சி நிலை ஏற்படுவதில்லை.

பெண்ணின் யோனித் துவாரத்தினுள் லிங்கம் நுழைக் கப்பட்டவுடனேயே பெண் உச்சநிலைமை அடைந்து வரு கிறாள் என்று எண்ணி சிறிதுநேரம் புணர்ச்சி இயக்கத்தை நடத்திவிட்டு விந்தை வெளிவிடுவதும் தவறு, யோனியும். ஆண் லிங்கமும் இணைந்து புணர்ச்சி அசைவுகளில் ஈடுபட்ட வுடன்தான் பெண்ணினுடைய சம்போக உணர்ச்சி நிலை உயருகிறது.

புணர்ச்சி அசைவுகள் நடைபெற்ற பின்னர்தான், படிப்படியாக உச்சநிலையை அடைந்து ஆணின் விந்து ஸ்கலிதம் ஆகும்பொழுது பெண்ணும் ஒரு புதிய உணர்ச்சி உச்சத்தை அடைகிருள். அப்படி விந்து ஸ்கலிதம் ஆன பின்னரும் பெண் உச்சநிலையை அடையாவிட்டால் ஆண், பெண்ணின்மீது குறைப்பட்டுக் கொள்வதில் அர்த்தமில்லை. அவனுடைய புணர்ச்சி முறையில் தவறு இருக்கிறது என்று தான் அர்த்தம்.

புணர்ச்சி வேலையை முழு முயற்சியுடன் செய்யவேண்டியது ஆண்தான் என்றும், பெண் முழுமனதுடன் தன்னை ஒப்படைத்துவிட்டு, ஆணை அனுமதித்து அனுபவித்துக் கொண்டிருந்தால் போதும் என்ற தப்பான எண்ணமும் நிலவி வருகிறது. ஆண்தான் இந்த விஷயத்தில் முன் முயற்சி எடுத்து வேலைசெய்ய வேண்டுமென்பது ஓரளவில் தான் உண்மை. புணர்ச்சியில் இரு பாலரும் ஒத்துழைத்தால்தான் உச்சத்தை அடைந்து பரம திருப்தி பெற முடியும். பெண்ணும் தன்னுலியன்றவரை தனது பங்கைச் செய்யவேண்டும்.

முத்தமிடுவது போன்ற ஸ்பரிஸ விளையாட்டுக்கள் ஆணுக்கே உரியதென்று பெண் இருந்துவிடக்கூடாது. தானும் அந்த வேலைகளை ஆணிடம் செய்யவேண்டும். ஆணுக்கு அது மிகவும் உற்சாகத்தையும் இன்பத்தையும் ஊட்டும்.

ஆண் புணர்ச்சி அசைவுகளை ஏற்படுத்தும்போது பெண்ணும் தன்னுடைய கடிதடத்தை—பெண் குறியை அதற்கேற்ப பதிலசைப்புகளுடன் அனுசரித்து ஏது செய்து கொடுக்கவேண்டும். புணர்ச்சி காலத்தில் பெண்ணினுடைய இடுப்பு எலும்புகளுக்குக் கீழே மிருதுவான தலையணை ஒன்றை அணைவாகக் கொடுத்துக் கொள்ளுதல் இந்த பதிலசைவு ஒத்துழைப்புக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

## மனமும் மகிழ்வும்

புணர்ச்சி என்பது உடலாலும் உள்ளத்தாலும் நிகழ்த்தப்படும் ஒரு செயல். உடலைவிட உள்ளந்தான் உண்மையான புணர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

உள்ளம் இணையாத புணர்ச்சி அதமமானது. வெறும் மிருக வெறியைத் தணித்துக் கொள்ளும் கொடூரத்தனம் வாய்ந்தது. இவ்வித வெற்றுடல் புணர்ச்சியில் ஆத்திரம் தணியுமே யொழிய ஆனந்தமும் திருப்தியும் ஏற்பட முடியாது.

உண்மையான ஆனந்தமும், திருப்தியும் உள்ளத்தால் தான் உண்டாகிறது.

ஆண்டாள் கண்ணனைக் காதலித்தாள். அந்தக் காதல் உடல் சம்பந்தமற்றது. உள்ளத்தால் ஒன்றுகி அளவற்ற ஆனந்தத்தைப் பெற்று மகிழ்ந்ததை அவளுடைய களி வெறிப் பாடல்கள் நமக்கு வெளியிடுகின்றன.

எனவே உள்ளம் என்ற மிகச் சிறந்த சாதனமின்றிப் புணர்ச்சி யின்பத்தை அனுபவிக்க முடியாது. ஆகவே உள்ளத்தைப்பற்றி இங்கு சற்று விரிவாகவே ஆராயவேண்டியது நமது கடமை.

உள்ளத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது நமது மூதாதையர்களின் கொள்கைகளையும் சிறிது உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வது ஏற்றதாகும்.

> "......மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கினையும் சேர்த்து மனிதனுக்குள்ளே அந்தக் கரணம் (உட்கருவி) என்று சொல்லுதல் வேதாந்த சாஸ்திர முறை. அவையனைத்தையும் ஒன்றுக்கிச் சித்தம் என்று சொல்வது யோகசாஸ்திர வழக்கு. பார்வை யென்னும் தொழிலுக்கு வெளிக்கருவி

கண்ணென்றால் உட்கருவி சித்தம். இப்படியே அனைத்திற்கும் கொள்க. எனவே எனது சித்தத்தைத் தவிர எனக்கு உலகம் வேறில்லை. நான் ஒரு யானையைப் பார்க்கும்போது புறத்தே நிற்கும் யானையை நான் பார்க்கவில்லை. அது காரணமாக என் சித்தத்துள் விழும் யானைச் சித்திரத்தையே நான் அறிவேன். எனக்கு உலகம் எனது சித்தமேயாதலால் என் சித்தம் எனக்கு வசப்படும்போது உலகம் எனக்கு வசமாய் விடும்.

பதஞ்சலியோக சூத்திரத்திற்கு வியாக்யானம் செய்யும்பொழுது பாரதியார் இவ்வாறு எழுதுகிறார்.

இப்பொழுது மேற் குறிப்பிட்டுள்ள வியாக்யானத்தை இன்னொரு கண்ணோட்டத்துடன் பார்ப்போம்.

ஒருவனுடைய புறக்கருவி செவி, உட்கருவி சித்தம் (உள்ளம்—மனம்) உட்கருவியாகிய சித்தம் அடங்கிய நிலையில் புறக்கருவியாகிய செவியில் விழும் ஓசை செயலற்றதாகிவிடுகிறது.

உதாரணமாக ஒருவன் ரேடியோவைத் திருகிவிட்டு ஆனந்தமாக அநுபவித்துக் கொண்டிருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். தூக்கம் அவனை மேற்கொள்ளுகிறது. தூங்கிவிடுகிறான். தூக்கம் வந்ததும் அவனைப் பொறுத்த வரையில் ஸங்கீதமும், அதனாலுண்டான ஆனந்தமும் மறைந்துவிடுகின்றன. ஏன்? தூக்கத்தில் அவனுடைய உள்ளம் "ஆபாவ" நிலையை அடைந்துவிடுகிறது. அதாவது வேலை செய்யாமல்-புற விருத்திகளுடன் சாராமல் தனித்து அடங்கி நிற்கிறது. எனவே ரேடியோ பாடிக்கொண்டிருந்த போதிலும்கூட, அவனுடைய உள்ளத்திலே பாடிக்கொண்டிருந்த ரேடியோ நின்றுவிடுகிறது.

அபாவம் என்பது பௌதிக லோகத்தை விட்ட நிலை. என்றுமில்லாத சூன்யத்தை சுபாவம் என்பாருமுளர். நித்திரையில் சித்தம் ஒரு பொருளையும் சாராமல் நிற்கிறது என்பது பொருள்.

—பதஞ்சலி யோக சூத்திரம்.

இதனால் விளங்குவது என்ன? உள்ளம் ஒரு பொருளை அனுபவித்தால்தான் நாம் அதை அனுபவிக்கிறோம். உள்ளம் அதை அனுபவிக்காதபோது நாமும் அதை அனுபவிப்பதில்லை.

இதையேதான் நிஷ்காம்ய கர்மம் என்று துறவிகளுக்குப் போதிக்கிறார்கள். எந்தக் கர்மத்தையும் உள்ளம் ஈடுபடாமல் செய்தால் அந்தக் கர்மம் அவர்களைக் கட்டுப்படுத்துவதில்லை. அதாவது அந்தக் கர்மம் அவர்களைப் பாதிப்பதில்லை. வேறு விதமாகக் கூறினால் உள்ளம் சம்பந்தப்படாத அந்தத் தொழிலால் அவர்கள் ஒருவித சுக-துக்கத்தையும் அனுபவிப்பது கிடையாது.

இதை வைத்துக்கொண்டு பார்ப்போமானால் உள்ளம் சம்பந்தப்படாத உடல் புணர்ச்சி எவ்வளவு போலித்தன்மை வாய்ந்தது என்பது நன்கு புலப்படும்.

இன்னுமொரு உதாரணம், இந்திரனால் சூது செய்யப்பட்ட அகலிகையை மாசுள்ளவள் என்று ராமன் கருதவில்லை. ஏன்? அந்த சம்பவத்திலே அகலிகை வஞ்சிக்கப்பட்டாள். அகலிகையைப்பொறுத்தமட்டில் அவள் தனது உள்ளத்தை இந்திரனுக்கு இழந்துவிடவில்லை. உடலை மட்டுமே இந்திரன் மோசம்செய்து வசியப்படுத்திக்கொண்டான். எனவே இந்திரனுடன் அகலிகையின் உள்ளம் இணையாதலால் அவளுக்கு அந்த சம்பவத்திலே பங்கு கிடையாது

இனி நேரடியாக நடைமுறை உதாரணத்துக்கு வருவோம் ஒருவர்மீது ஒருவருக்கு உள்ளப்பற்று இருந்தால் தான் கலவியின்பம் நிறைந்து விளங்கும்.

ஒருவருடைய மனம் மற்றொருவரை முழுக்க முழுக்க விரும்பவேண்டும். மனதிலே இந்த விருப்பம் பிணைப்பு ஏற்பட்டு உள்ளம் உருகவேண்டும். அது இல்லாதவரையிலும் வெறும் வெற்றுடல் சேர்க்கையாக, யந்திரீகமாகத்தான் புணர்ச்சி ஏற்படும். அதிலே இன்பம் இருக்கமுடியாது. அதாவது வெளிக்கருவி வேலை செய்யுமே ஒழிய உட்கருவியாகிய உள்ளம் வேலை செய்யவில்லை. அப்படியானல் நிலை என்ன? தூங்குகிறவன் செவியில் ஒலித்துக்கொண்டிருந்த ரேடியோ சங்கீதத்தின் நிலைதான்.

இதே சமயத்தில் இன்னொரு கேள்வியும் எழுவதற்கு வழியிருக்கிறது. "சிலர் வேசை இல்லங்களுக்குச் சென்று அங்கேயே மனமிழந்து பொருளிழந்து உழலுகிறார்களே! அப்படி அவர்களுக்கு அங்கு இன்பம் கிடைக்காவிட்டால் அவர்கள் ஏன் கள்ளுண்ட வண்டுகள்போல் தத்தளிக்க வேண்டும்" என்று கேட்கலாம்.

இதிலே முக்கியமாகக் கவனிக்கவேண்டிய இரு விஷயங்கள் உள்ளன.

ஒன்று வேசை வீட்டுக்குச் செல்லும் ஆணின் மனநிலை என்ன? அவனுடைய உள்ளம் காதல் என்னும் பொன் முலாம் பூசப்பட்டதல்ல. வெறும் மிருக இச்சையே அவனுடைய உள்ளத்தில் தலைவிரித்தாடுகிறது உடலில் ஊறிய தினவைத் தீர்த்துக்கொள்ள ஒரு கருவியைத் தேடிச் செல்லுகிறான். அந்தக் கருவி இவனை ஏமாற்றுகிறது. "காதல் மொழியில்" நாடகமாடுகிறது. அங்கே நிலவும் அத்தனையும் போலி. வெறும் கேலிக்கூத்து. ஆணினுடைய வெறியைத் தணிக்கும் கருவியாகப் பயன்பட்டுவிட்டு, தனக்குக் கிடைத்த காசை யெண்ணிப் பெருமையடைகிறாள் அந்தப் பெண் யந்திரம். மரத்துப்போன உள்ளத்தை

யுடைய ஆண், தனது மிருக வெறி தணிந்ததும், "போலி யான திருப்தியுடன்" திரும்புகிறான். மரத்துப்போகாத ஆணாக இருந்தால், எதையோ ஒன்றை இழந்த ஏமாற்றத் துடன் திரும்புகிறான். அவனுடைய உடல்வெறி தீர்ந் திருக்கலாம். ஆனால் உள்ளத்தில் வேதனைதான் நிரம்பி யிருக்க முடியும்.

மற்றொன்று, ஆண் பெண் சேர்க்கையென்பது தியா கத்தை அடிப்படையாகக் கொண்டது. (இதைப்பற்றி பின் னர் விவரிப்போம்) ஆனால் வேசை வீட்டில் நடப்பது வெறும் வியாபாரம். அங்கே கொடுப்பவர்களும் வாங்குப வர்களும் சுயநலத்தையே கருத்தில் கொண்டவர்கள். தியாக அடிச்சுவட்டின் தூசுகூட அங்கு படுவதில்லை.

மணவாழ்க்கை என்பது மனிதனுக்குத் தியாகத்தைப் போதிக்கும் பள்ளிக்கூடம்.

ஒரு ஆணோ பெண்ணோ சிறு வயதிலிருந்தே சுய நலச் சூழ்நிலையிலேதான் வாழ்கிறார்கள். எதற்கெடுத்தாலும் "எனக்கு" என்ற எண்ணமே முன்னிட்டு நிற்கிறது.

ஆனால் பருவகாலம் வந்து, உடம்பிலும் உள்ளத்திலும் புதிய மாற்றம் ஏற்படுத்துகிறது. ஆணுடைய உள்ளம் ஒரு பெண்ணை நோக்கி தவம் கிடக்கிறது. அதேமாதிரி பெண்ணி னுடைய உள்ளம் ஒரு ஆணை நோக்கித் தவம் கிடக்கிறது. தன்னுடைய துணைவிக்காக நான் இன்னின்னது செய்வேன் என்று ஆண் கற்பனைசெய்ய ஆரம்பிக்கிறான். அதேமாதிரி பெண்ணும் தன்னுடைய கணவனுக்கு இப்படி இப்படி உதவி செய்வேன் என்று கனவு காணுகிறாள்.

மணமானதும், இதுவரையிலும் தனக்கென்று தேடிக் கொண்டிருந்த ஆண், மனைவிக்காகத் தேட ஆரம்பிக்கிறான். தனக்கில்லாவிட்டாலும் தன் மனைவிக்கு இன்னின்னது வேண்டுமென்று, சிரமப்பட்டு வாங்குகிறான். தன் மனைவிக் காகத் தியாகம் செய்யவேண்டுமென்ற எண்ணம் மனதில்

முன்நிற்கிறது. அதேமாதிரிதான் பெண்ணுக்கும். பின்னர் குழந்தைகள் பிறந்ததும், இருவரும் தங்களை மறந்து சந்ததிகளை மனதில் கொண்டு தியாக வாழ்க்கை நடத்துகின்றனர். பின்னர் மக்கள், மருமகன், மருமகள், பேரன், பேத்தி என்று தியாகப்பட்டியல் வளர ஆரம்பிக்கிறது.

இப்படி தியாகம் என்ற உயர்ந்த மனப்பண்பில் அமைக்கப்பட்டிருக்கும் தாம்பத்திய உறவு முறைக்கும் கேவலம், மிருக இச்சையையும் சுயநலத்தையும் அடிப்படையாகக்கொண்ட விபசாரத்திற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமிருக்கிறது.

தாம்பத்ய காதல் உறவு, தங்கக் கிண்ணத்தில் வார்த்த புத்தமுதம். விபசார வெற்றுடல் புணர்ச்சியென்பது ஓட்டைச் சிரட்டையில் சிந்திய சாக்கடை நீர். அமுதத்தைச் சுவைத்தவன் மற்றதை நினைக்கவும் மாட்டான் என்பது திண்ணம் !!

## பெண்ணுக்கு ஆண் !

## ஆணுக்குப் பெண் !!

உண்மையான காதல் இன்பம், உள்ளத்தைச் சார்ந்தது என்பதை சென்ற அத்தியாயத்தில் கண்டோம். அந்த உள்ளப்பற்றை இதயப் பிணைப்பை எப்படி ஏற்படுத்திக்கொள்வது என்பது மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

ஆணும் பெண்ணும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நன்ருகப் புரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் மற்றவருக்காக விட்டுக்கொடுக்கவேண்டும். ஆண் விரும்புவது என்ன என்பதைப் பெண் புரிந்துகொண்டு அதற்குத் தக்கபடி நடக்கவேண்டும். அதேபோல பெண் விரும்புவது

என்ன என்பதை ஆண் புரிந்துகொண்டு திருப்திப்படுத்த வேண்டும்.

பெண் ஆடை அலங்காரம் செய்து கொள்கிறாள் எதற்காக? அழகுக்காக. தன்னுடைய அழகை ரஸிக்க வேண்டியவன் கணவன்; தானல்ல. எனவே கணவனுக்கு எவ்வித அழகு பிடிக்கிறதென்பதுதான் முக்கியமே ஒழிய, தனக்கு எவ்வித அழகு பிடிக்கிறதென்பதல்ல முக்கியம். பெண்ணுக்குப் பச்சைப் புடவை கட்டிக்கொள்ள ஆசையாக இருக்கலாம். ஆனால் அவளுடைய கணவன் அவளை கனகாம்பரப் புடவையில் பார்ப்பதிலேதான் ஆனந்தமும் கவர்ச்சியும் அடைகிறான் என்றால், அவள் கட்டிக்கொள்ள வேண்டியது பச்சையல்ல; கனகாம்பரமே.

இதே விதிதான் ஆணுக்கும். பெண் தன் கணவன் எப்படி இருக்கவேண்டுமென்று விரும்புகிறாளோ அப்படியே தன்னை அலங்கரித்துக் கொள்வதுதான் சரி.

புற அழகுகளால் மட்டுமே மனப் பிணைப்பு ஏற்பட்டு விடும் என்று நினைத்துவிட்டால் அதுவும் தவறு. அழகும் அலங்காரமும் ஆரம்பக் காலத்துக்குத்தான் பயன்பட முடியும்! வெறும் புற அழகு மட்டும் உள்ளத்தைக் கவர்ந்து விடாது! உள்ளழகுதான் உண்மையில் உள்ளத்தைக் கவர முடியும்!

குரூபிகளை அழகிகள் காதலிப்பதும் உண்டு. அவலட்சணங்களைக் கட்டிளங்காளைகள் விரும்பித் தவம் கிடப்பதும் உண்டு. எல்லாம் உள்ளத்தைப் பொறுத்தது.

எங்கள் கிராமத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு வாலிபன் தன் இளம் மனைவியிடம் பற்றில்லாமல் ஒரு வயதான அழகற்ற விதவையிடம் நட்புக் கொண்டிருந்தான். அவளிடம் ஏற்பட்ட பிணைப்பு மிகவும் அதிகமாகி விட்டது. மனைவியை விட்டுவிட்டு வயோதிக விதவையிடமே சென்று வசிக்க ஆரம்பித்தான். பெண்ணின் உற

வினர்கள் வயோதிக விதவையை ஏசிக் கண்டிக்க ஆரம்பித்தார்கள். உடனே அவள் அந்த வாலிபனை வரக்கூடாதென்று தடுக்க ஆரம்பித்தாள்! அதனுடைய முடிவு அந்த வாலிபனின் தற்கொலையில் வந்து நின்றது. இதைக்கொண்டு பார்த்தால் அந்த வாலிபன் புற அழகுக்காக உயிரை விடவில்லை. பின்னே? ஏதோ அவனுடைய உள்ளம் அவளுடைய உள்ளத்துடன் லயித்துவிட்டது; அவ்வளவுதான்.

கலியாணமான தாம்பத்ய வாழ்க்கையின் ஆரம்பக் காலம் இருக்கிறதே அதுதான் தம்பதிகளின் உள்ளங்களைப் பிணைக்கும் முக்கிய பருவம். அப்போது ஏதாவது ஒரு சிறு பிணக்கு ஏற்பட்டாலும் அதுதான் பின்னர் விஷ விருட்சமாகப் படர்கிறது.(இங்கே பிணக்கு என்று குறிப்பிடுவது—காதல் வாழ்வுக்கு வேண்டிய ஊடலை என்று நினைத்துவிட வேண்டாம்.)

கல்யாணமான புதிதில் சிற்சில பெண்கள் புணர்ச்சியில் போதிய இன்பம் துய்ப்பவர்களாக இருக்கமாட்டார்கள். படிப்படியாக நாளடைவில்தான் அவர்களுக்கு சம்போகத்தில் இச்சை எழ ஆரம்பிக்கிறது. எனவே இந்தச் சமயத்தில் ஆண் தப்பாக அர்த்தப்படுத்திக்கொண்டு அதிருப்தியடைந்து மனவேற்றுமையை வளர்த்துக் கொள்ளக் கூடாதென்பதை எச்சரிக்க வேண்டியதிருக்கிறது.

அதேமாதிரி பெண்களுக்கு ஒன்று சொல்லியாக வேண்டும். புதிதாக புக்ககம் வந்த பெண்களில் சிலர் பிறந்த வீட்டையே சதா நினைத்துக்கொண்டு வந்த இடத்தில் போதிய பற்றற்றவர்களாகத் திரிகிறார்கள். இந்த அசிரத்தை கணவனிடம் அதிருப்தியை ஏற்படுத்துகிறது. சில பெண்கள் மணமான பின்னரும் தாய் வீட்டு உறவை மறக்க முடியாமல்—அடிக்கடி பிறந்தகம்போக ஆரம்பித்து கடைசியில் வாழாவெட்டியானவர்களும் உண்டு.

பெண்ணாகப் பிறந்தவள் என்றும் புருஷன் வீட்டில் வாழவேண்டியவள்தான். புதிய சூழ்நிலையில் கணவனுடைய

அன்பையும், கணவன் வீட்டாரின் அன்பையும் பெற்று தன்னை அங்கே ஐக்கியப்படுத்திக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்தால்தான் அவளுடைய வாழ்வு வளம்பெற முடியும். இல்லாவிட்டால் "எலியும் தவளையும் மிக இஷ்டமாய் மனம் —கலந்து வாலும் காலும் கயிற்றால் கட்டிக் கொண்டது" என்ற பள்ளிப் பிள்ளைகளின் கதைப்பாட்டில் வரும் கதாபாத்திரங்களின் கதிதான் ஏற்படும். அதாவது மாப்பிள்ளை வீடென்ற குளத்தில் வாழும் மணமகன் என்ற தவளையுடன், தாலி என்ற கயிற்றால் பிணைத்துக்கொண்ட எலியாக ஆகிவிடுகிறாள் மனைவி. எலி தண்ணீரில் வாழமுடியாது, செத்து மிதக்கும். எலியைப் பருந்து தூக்கினால் தவளையின் பாடும் ஆபத்தாக முடியும்!

ஆனால் ஆணும் விட்டுக்கொடுத்து, மனைவியிடம் அன்பு செலுத்தவேண்டும். பெற்றவர்களையும், பிறந்த வீட்டையும் துறந்துவிட்ட பெண்ணானவள் உன்னையே சதமென்று வந்துவிட்டாள் என்ற போதும் பெற்றவர்களின் அன்பையும் பிணைப்பையும் முற்றிலும் மறந்துவிட யாராலும் முடியாது—அதுவும் மிகவும் மிருதுவான இதயம் படைத்த பெண்களால் ஒருக்காலும் முடியாது. எனவே உன்னுடைய அன்பின்மூலம் அவளைக் கவர்ந்து உன்னுடையவளாக்கிக் கொள்ளவேண்டிய முழுப்பொறுப்பும் உன்னையேசார்ந்ததுஎன்பதை கொஞ்சமும் மறந்துவிடக்கூடாது.

தம்பதிகள் இருவரும் ஒருவர் மற்றொருவருக்காகவே வாழவேண்டும். அப்போதுதான் தாம்பத்ய வாழ்க்கையில் உண்மையான இன்பங் காணமுடியும்.

## கர்ப்பத் தடை

கர்ப்பத்தடை என்ற வார்த்தையைக் கேட்டதும் நம்முடைய ஜனங்களிடம் ஒரு விசித்திரமான தப்பபிப்ராயம் ஏற்படுகிறது. அப்படித் தடை செய்வது மிகவும் கொடூர

மான பாவச்செயல் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. இந்த எண்ணம் சரியானதல்ல.

சாதாரணமாகவே நமது நாடு ஜனத்தொகையில் வெகுவாக முன்னேறி வருகிற நாடு. நம்முடைய தேசிய வருமானமோ மிகமிகச் சொற்பம்.

நமது நாட்டில் பெரும்பான்மையோர் மிகவும் ஏழ்மையில் உழலுபவர்கள். கலியாணமான பின்னர் ஆணும் பெண்ணுமாகத் தாம்பத்ய வாழ்க்கை நடத்துவதற்கே குடும்பத்தின் வருமானம் பற்ருமலிருக்கிறது. மாதந்தோறும் கிடைக்கும் சம்பளம் இழுத்துப்பறித்து வயிற்றை அரைகுறையாக நிரப்புவதற்குத்தான் சரிப்படுகிறது. ஏதாவது ஒரு மாதத்தில் சேலை துணிமணி போன்ற உபரிச் செலவு ஏற்பட்டுவிட்டால், பின்னர் அந்த மாதம் ஏற்பட்ட கடனை அடைக்க ஆறு மாதங்களுக்கு குடும்பப் பொருளாதாரத் திட்டத்தை "சிக்கனமான" முறையில் திருத்தி அமைக்க வேண்டியதிருக்கிறது. இப்படியிருக்கையில் குழந்தை வேறு பிறந்துவிடுகிறது.

குழந்தை பிறந்தால், அதை வளர்ப்பதென்பது சர்வ சாதாரணமான விஷயமல்ல. குழந்தையை நல்ல முறையில் போஷிக்க வேண்டும். பின்னர் படிப்பு முதலிய செலவுகள் ! இப்பொழுது நாம் வளர்க்கும் குழந்தைகள் தாம் எதிர்கால உலகத்தின் பிரஜைகள். எதிர்காலப் பிரஜைகளின் மகோன்னதமான செயல்கள் நம் தலைமீது சுமத்தப்பட்டிருக்கிறதென்பதை மறந்துவிடக்கூடாது ! நாளைய கலைஞர்களையும், ராஜதந்திரிகளையும், அரசியல் தலைவர்களையும், ஜனுதிபதிகளையும் நாம்தான் உற்பத்திசெய்கிறோம். இந்த எண்ணம் எப்பொழுதும் நம்முடைய உள்ளத்தைவிட்டு அகலாமல் இருக்க வேண்டும்.

இன்றைய நிலையில் ஏழ்மையில் வாடும் நமது சகோதர சகோதரிகளின் குழந்தைகளைப் பெற்றுத் தள்ளுகின்றனர். அவர்களை உயிருடன் வாழ வைப்பதற்கே இவர்கள்

படாதபாடு படவேண்டியதிருக்கிறது. அப்படியிருக்கையில் குழந்தைகளை வீரர்களாகவும், தீரர்களாகவும், புத்திசாலிகளாகவும் உற்பத்தி செய்துவிடுவதென்பது எப்படி முடியும் ?

எனவே, ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றதும் நமது பிரஜா உற்பத்திப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். ஏராளமான பயனற்ற குழந்தைகளை நாட்டுக்கு உற்பத்தி செய்து கொடுப்பவர்களைவிட, சிறந்த ஓரிரு குழந்தைகளை உற்பத்தி செய்து கொடுப்பவர்களே உண்மையில் நாட்டுக்குத் தொண்டுகள் செய்பவர்களாவார்கள்.

"பகவான் புத்திர சாதனத்தைக் கொடுக்கிறார்; நாம் எப்படித் தடுக்கமுடியும்?" என்று சொல்லித் தட்டிக் கழிப்பது அர்த்தமற்ற விவாதம்.

பகவான் என்னென்ன வெல்லாமோதான் கொடுக்கிறார்! நாம் அவற்றையெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறோமா? உடம்பிலே நோய் வருகிறது. அதை அப்படியே பகவான் விட்டவழி விடட்டுமென்று சும்மா இருக்க வேண்டியதுதானே! ஏன் டாக்டரைத் தேடிச் செல்லுகிறோம் ?

பகவான் ஆண்களின் முகங்களிலே தாடி வளர வேண்டுமென்று இயற்கையிலேயே அமைத்திருக்கிறார். நாம் ஏன் அவற்றைச் சிறைத்து, அல்லது திருத்தி அழகு படுத்திக் கொள்ளுகிறோம்.

குழந்தை பிறக்காமல் கட்டுப்படுத்துவதற்கு என்ன செய்வது? மகாத்மா காந்தி, புருஷனும் மனைவியும் பிரம்மச்சரியத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்று கூறுகிறார்.

மனிதர்களில் பெரும்பாலோர் இயற்கையின் உணர்ச்சிகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். அந்த உணர்ச்சிகளை அடக்கிப் பற்றற்ற ஞானிகளாவதற்கு ஏதோ ஓரிரு மகாத்மாக்

களால்தான் முடியும். சாதாரண ஜனங்களால் பிரம்மச் சரியம் அனுஷ்டிப்பதென்பது ஒருக்காலும் முடியாது.

ஆகையால் புருஷனும் மனைவியும் காமசுகத்தை அநுபவித்துக்கொண்டே குழந்தைகளையும் பெருமல் இருக்க இயற்கை வழிகளைத்தான் தேடவேண்டும்.

இதையேதான் கவிஞர் பாரதிதாசன்—

''காதலுக்கு வழிவைத்து
கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்
இதிலென்ன குற்றம்?
காதலுக்கோ பிள்ளை?
தவிப்பதற்கோ பிள்ளை?
சந்தான முறை நன்று;
தவிர்க்குமுறை தீதோ?''

—என்று கூறுகிருர்.

அப்படிச் செயற்கை வழிகளைக் கையாளுவதில் எவ்விதத் தவறும் கிடையாது.

குழந்தை பிறக்காமல் தடுப்பதென்பது, குழந்தையினுடைய உயிரைக் கொன்றதைப் போன்றதாகுமென்று சிலர் கருதுகிருர்கள். இதுவும் முற்றிலும் தவறு. கர்ப்பத் தடையிலே எவ்வித சிசுவதையும், உயிர்வதையும் கிடையாது. கருச்சிதைவு ஏற்படும்போதுதான் உண்டான உயிரை அழிக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆனல் கருவே உண்டாகாமல் தடுத்துவிட்டால், கருச்சிதைவும் ஜீவ வதையும் இல்லையல்லவா!

ஆணினுடைய விந்து அணுவை பெண்ணினுடைய முட்டையுடன் கலக்கவிடாமல் செய்துவிட்டால் கருத் தரிக்க வழியில்லை. இப்படிச் செய்வதிலே எவ்வித பாபமும் கிடையாது.

ஒவ்வொரு புணர்ச்சிக் காலத்தின்போதும் பல லட்சக் கணக்கான விந்து அணுக்கள்—உயிர்கள் வெளியாகின்றன அல்லவா ? கருத்தரிக்கும்போது அத்தனை லட்சத்தில் ஏதாவது ஒன்றுதானே முட்டையுடன் கலக்கிறது. மற்றவையெல்லாம் பயனற்றுப் போய்விடுகின்றன. அதே மாதிரி லட்சத்தோடு லட்சத்தி ஒன்ருக இந்த ஒரு விந்து அணுவும் பயனற்றதாகப் போய்விடுவதில் என்ன பாபம் ஏற்பட்டு விடமுடியும் ? எனவே நமது சகோதர சகோதரிகளில் தங்களுக்குத் தேவையான புத்திர சந்தானம் கிடைத்த பிற்பாடு கற்பத்தடையை அனுசரித்து வாழ்க்கையில் தொந்தரவுகளைக் குறைத்துக்கொண்டு இன்பம் காணவேண்டுமென்று சிபாரிசு செய்கிறேன்.

கர்ப்பத்தடை செய்வது எவ்விதம் என்பதைக் கவனிப்போம்.

கர்ப்பத்தடை முறைகளில் பலவிதம் உள்ளன. அவற்றை மூன்றுவிதமாகப் பிரிக்கலாம்.

(1) ஆண் உபயோகிக்கும் முறை.
(2) பெண் உபயோகிக்கும் முறை.
(3) இருவரும் சேர்ந்து உபயோகிக்கும் முறை.

## விந்துவிடா முறை

புணர்ச்சிக் காலத்தில், ஆண் குறி விரைப்பானதும், பெண் குறிக்குள் நுழைத்துக்கொண்டு, ஆண் ஆட்டாமல் அசைக்காமல் வைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். இப்படி வைத்துக்கொண்டிருக்க வேண்டிய கால அளவு அரை மணி-முக்கால் மணி நேரம் பிடிக்கும். இவ்விதம் வைத்துக் கொண்டிருப்பதால் பெண்ணுக்கு மட்டும் உணர்ச்சியின் உச்சக்கட்டம் ஏற்படும் என்று கூறுகிருர்

கள். இதன் மூலம் ஆண் திருப்தியடைவது என்பது முடியாது. ஆணினுடைய நிலை பிரமச்சரியம் அனுஷ்டிக்க வேண்டியதாகிறது. பெண்ணுக்கும் ஆண்குறியை அசைக்காமல், அதாவது பெண் லிங்கத்தில் உராய்தல் ஏற்படாமல் அவ்வளவாகத் திருப்தி ஏற்பட முடியாது. எனவே இந்த முறை சரியல்ல.

## விந்துவை வெளியே விடும் முறை

அதாவது ஆணும் பெண்ணும் சாதாரணமாகச் சம்போகம் செய்வதைப் போன்றதுதான் இந்த முறை. ஆணுக்கு உணர்ச்சியின் உச்சகட்டம் ஏற்பட்டு, விந்து வெளியாகும் என்று தெரிந்ததும். ஆண் குறியை பெண் குறியிலிருந்து உருவி வெளியே எடுத்து விந்தை வெளியில் வடிப்பது.

ஆணுக்கு விந்து வெளியாகும் சமயம்தான் இணையற்ற இன்பம் சுரக்கும் நேரம். அதுவும் பெண் குறிக்குள் மேலும் கீழும் உராய்ந்தபடியே விந்தை வெளியிடுவதுதான் பிரமானந்தம். பெண்ணுக்கும் இந்த சமயத்தில் ஒருவித பேரானந்தம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் "எப்பொழுதடா விந்து வரப்போகிற" தென்று காத்திருந்து. விந்தை வெளியே வடிப்பது முடியாது. அப்படி தப்பித் தவறி ஒரு சிறிய அளவு விந்து பெண் குறிக்குள் பாய்ந்து விட்டாலும் கருத்தரிக்க ஏதுவாகி விடுகிறது. எனவே இந்த முறையும் உகந்ததல்ல.

இப்படிச் செய்வதால், ஆண் பெண் இருவருக்குமிடையே ஒருவித அதிருப்தி மனப்பான்மை நிலவும். இதுவே பின்னர் உள்ள வேறுபாட்டுக்கும் உடல் நலக் கேட்டிற்கும் வழிவகுத்து விடுகிறது. இம்முறை நாளடைவில் சிலருக்குச் சித்தப் பிரமையைக்கூட உண்டாக்கிவிடும்.

## விந்தை மூத்திரப் பைக்கு மாற்றும் முறை

மூத்திரமும், விந்தும் வெளியாவதற்கு ஆண் குறியில் ஒரே துவாரம்தான் இருக்கிறதென்று முன்னரே தெரிந்துள்ளோம். இந்த "ஒன்வே டிராபிக்"கில் விந்து வந்தால் மூத்திரம் வராது. மூத்திரம் வந்தால் விந்து வராது.

சம்போக காலத்தில் விந்து வெளியாகும்போது ஆண் குறித் தண்டின் அடிப்பாகத்தில் விந்து வெளியாகும் குழாயை விரலால் அழுத்திப் பிடித்துக்கொண்டு பீச்சினால், விந்து மூத்திரப் பையைச் சேர்ந்துவிடும். பின்னர் சம்போகத்திற்குப் பிறகு முத்திரம் பெய்தால், விந்து மூத்திரத்துடன் வெளியேறிவிடும். இந்த முறையும் நடைமுறையில் ஆனந்தத்தைக் கட்டுப்படுத்தும். விந்துக் குழாயைச் சரியாக இறுக்கிப் பிடிக்காவிட்டால் சாதாரணமாகப் பாய்வதைவிட அதிவேகமாகச் சென்று, விந்து கருக் குழியை அடைந்துவிடும். எனவே இதுவும் உகந்ததல்ல.

### ரப்பர் கருவிகள்

விந்து பெண் குறியில் விழாமல் இருப்பதற்காக ஆணும் பெண்ணும் ரப்பர் கருவிகளை உபயோகிப்பதுண்டு.

ஆண் குறியின் மலரை மட்டும் மூடக்கூடிய ஒரு உறை இருக்கிறது. இந்த உறை சம்போக வேகத்தில் சுலபமாகக் கழன்றுகொள்ளக்கூடியது. மற்றொன்று ஆண் குறி முழுவதையும் மூடுவது. இது சுலபமாகக் கழன்றுவிடுமென்று சொல்ல முடியாது. ரப்பர் உறை ஒரோரு சமயங்களில் கிழிந்து விந்து உள்ளே கசிந்து கர்ப்பம் ஏற்பட வழியிருக்கிறது.

ஆனால் இந்த முறையிலும் பெண் குறிக்குள் விந்து செல்லாதாகையால், விந்துவின் வழவழப்புடன் கூடிய உராய்தல் முறையில் ஏற்படும் ஆனந்தம் இந்த சம்போகத்தில் ஏற்பட முடியாது.

இதேமாதிரி பெண்ணினுடைய கர்ப்பப்பைத் துவாரத்தை மூடுவதற்கு ரப்பர்க் கிண்ணங்களும் உள்ளன. அவற்றை இணைத்து. அதற்கென்று உள்ள சில களிம்புகளையும் மருந்துகளையும் தடவவேண்டும். இந்த மூடியைச் சரியாகப் பொருந்தாவிட்டால், லட்சக்கணக்கான சுக்கில உயிர்களில் இரண்டு ஒன்று உள் நுழைந்தாலும் கருத்தரிக்க வழியுண்டு. இரண்டாவது இதை எப்படி உபயோகிப்பது என்பதை மிகவும் கவனமாகத் தெரிந்து செய்ய வேண்டும்.

## சம்போகத்திற்குப் பின் கழுவும் முறை

சம்போகம் முடிந்த உடனேயே அவசரம் அவசரமாக எழுந்து சில மருந்துப் பொருள்கள் சேர்ந்த நீரால் பெண் குறிக்குள் "டுஷ்" கருவியின் மூலம் விட்டுக் கழுவி, விந்து கருத்தரிக்காதபடி செய்வதுண்டு.

இதைத்தவிர இன்னும் பலமுறைகளுமிருக்கின்றன.

தேனும், வேப்ப எண்ணெயும் கருப்பத் தடைக்கு உபயோகப்படுமென்று கூறுகிறார்கள். தேனையோ, வேப்ப எண்ணெயையோ பெண் குறிக்குள் கருப்பப்பை விழிம்பு நனையும்வரை ஊற்றிக்கொண்டு, ஆண் குறியிலும் நன்றாகத் தடவிக்கொண்டு சம்போகம் செய்தால், விந்து உயிர் இயக்க சக்தியற்று, வேகம் குறைந்து வெளிவந்த இடத்திலேயே—கருப்பப்பைக்கு வெளியிலேயே தங்கி இறந்து விடுவதாகக் கூறுகிறார்கள்.

சாதாரணமாக பெண் மாதவிடாயாகிய 7 நாட்கள்வரையிலும், மாதவிடாய் காண்பதற்கு முந்திய 10 நாட்களும் கருத்தரிக்காத நாட்களென்றும், அந்த நாட்களில் சம்போகம் செய்வதன் மூலம் கருத்தரிப்பதைத் தடை செய்யலாமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆனால் பெண்ணுக்குச் சம்போக இச்சை பிறக்கும் நாட்களாக, மாதவிடாய்க்கு முந்திய சில நாட்களையும், மாத விடாய் ஆகி 12 நாட்கள் ஆகிவிட்ட பின்னருள்ள சில நாட்களையும் குறிப்பிடுகின்றார்கள். இவ்விதம் கணக்கெடுத் தால் மாதம் ஒரு முறைதான் புணர்ச்சியிலிடுபடலாம்.

இந்த முறையும் நிச்சயமாகக் கருத்தரிப்பதைத் தடை செய்யுமென்று உறுதி கூற முடியாது.

## ஆபரேஷன் முறையே சிறந்தது

எல்லாக் கருப்பத்தடை முறைகளையும் சீர் தூக்கிப் பார்க்கும்பொழுது ஆபரேஷன் முறையே சிறந்து விளங்கு கிறது.

இந்த முறையிலும், ஆணுக்கும் சரி, பெண்ணுக்கும் சரி எவ்வித சுகக்கேடும், பீதியும் உண்டாவதில்லை. சம்போக இச்சையோ சக்தியோ குன்றிவிடுவதில்லை. அதற்குப் பதி லாக சம்போக காலத்தில் மிகவும் பரிபூரணமாக ஆனந் தத்தை ஆணும் பெண்ணும் அடைகிறார்கள். உடம்பிலே தெம்பும் தேஜஸும் இளமையும் ஏற்படுகிறது.

ஆணினுடைய விதைக் கொட்டைகளிலிருந்து ஜீவ அணுக்கள் (விந்து) உற்பத்தியாகி, விந்துக் குழாய்களின் வழியாக மேலேறி, விந்து சேமிப்பு அறையான சுரபிகளுக் குப் போய்ச் சேருகின்றது என்று முன்னர் விளக்கிக் கூறி யிருக்கிறோம். அந்த இரு குழாய்களையும் துண்டித்துவிடு வது அல்லது இறுக்கி முடிந்துவிடுவது.

விந்துக் குழாயை முடிந்துவிடுவதில் ஒருவித நன்மை யிருக்கிறது. அதாவது பின்னர் ஒரு காலத்தில் கருத்தரிக் கச் செய்யவேண்டுமென்று தேவை யேற்பட்டால், இந்த முடிச்சுமுறை உதவியாக இருக்கும். விந்துக் குழாயைத்

துண்டித்துவிடும் முறையில் மறுபடியும் ஒரு காலத்தில் தேவையேற்பட்டால் கருவுறும்படி செய்வதில் சிற்சில சமயங்களில் முடியாமல் போனாலும் போகலாம் என்று கூறுகிறார்கள். ஆனால் முடிச்சை ஊடுருவிக்கொண்டு சிற்சில சமயங்களில் எப்போதோ ஒரு விந்து அணு, கருப்பைக்குப் போய்ச் சேர்ந்தாலும் கருத்தரித்துவிடும் அபாயமும் உண்டு. ஆனால் அது மிகவும் அரிதாக ஏற்படும் விஷயம்.

இந்தமாதிரி விந்துக்குழாயை ஆபரேஷன் செய்துகொள்வது மிகவும் சுலபமானது. எந்த சர்ஜனும், 15, 20 நிமிஷங்களில் செய்து முடித்துவிடக் கூடியதுதான். மயக்க மருந்து கூடக் கொடுக்கவேண்டியதில்லை. மரமரப்பு ஊசிமட்டும் போட்டுவிட்டு ஆபரேஷனைச் செய்யலாம். ஆபரேஷன் முடிந்தவுடனேயே எழுந்து நடமாட முடியும். ஆனால் இரண்டு மூன்று நாட்கள் படுக்கையிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டு புண்ணுக்கு மருந்திட்டுக் கொள்ளவேண்டும்.

இதேமாதிரி பெண்களும் கர்ப்பத்தடைக்கான ஆபரேஷன்கள் செய்துகொள்ள இடமிருக்கிறது. ஆனால் அவர்களுக்குச் செய்யவேண்டிய ஆபரேஷன்களில் சிரமமிருக்கிறது.

எனவே கர்ப்பத்தடைக்கான ஆபரேஷனை ஆண்களே செய்துகொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்கிறார்கள். அதுதான் சுலபமானது, நன்மை பயப்பது.

தேவையில்லாமல் குழந்தைகளைப் பெற்றுச் சிரமப் படாமல், கருத்தடைமூலம் வேண்டிய ஓரிரு குழந்தைகளைப் பெற்று, நல்லமுறையில் குழந்தைகளை வளர்த்து, நாட்டின் எதிர்கால நன்மைக்கு ஒவ்வொரு தம்பதிகளும் பாடுபடுவதே நல்லது.

## மலடும் மாற்றமும்

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

[தமது குழந்தையின் சின்னஞ் சிறு கைகளால் கலக்கப் பட்ட கூழ் தேவாமிர்த்தத்தைவிட இனியது.]

"குழல் இனிது யாழ்இனிது என்பர் தம் மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்."

[தன்னுடைய குழந்தையின் மழலைச் சொல் கேளாதவர் களே குழலையும், யாழையும் இனிமையாக இருக்கிற தென்று கூறுவர்.]

திருவள்ளுவர் இவ்விதமாக மக்கட்பேற்றை மிகமிக அநுபவித்து, உயர்த்திக் கூறுகிறார். குழந்தை பெறுதவர் "புத்" என்னும் நகரத்திற்குப் போய்ச் சேருவதாக நமது நாட்டவர் எண்ணுகிறார்கள்.

அதனாலேயேதான் 'மலடி' என்ற சொல்லை மிகவும் இழிவாகக் கருதுகிறார்கள். குழந்தை யில்லாவிட்டால் கோவில் குளங்களுக்குச் செல்வதும், மந்திர மாயங்கள் பண்ணுவதும் வழக்கமாக இருந்து வருகிறது.

நம்மில் பலர், மலட்டுத்தன்மை பெண்களுக்கு மட் டுமே இருப்பதாக நினைத்து வருகிறார்கள். ஆண்களிலும் மலடாக இருக்கிறவர்கள் உண்டு என்பதை நம்பக்கூட மறுக்கிறார்கள். எனவேதான் "மலடி" என்று கூறும் நம் மனிதர்கள் மலடியின் கணவனைப் பார்த்து "மலடன்" என்று கூறுவதில்லை.

இந்த நம்பிக்கையின் காரணமாகவேதான் கல்யாண மாகிச் சில வருடங்கள் வரையில் குழந்தைப்பேறு உண் டாகாவிட்டால், இருவரையும் பரிசோதித்துப் பார்க்காமல் வேறொரு பெண்ணைப் பிடித்து மறுவிவாகம் செய்துவைக் கிறார்கள். இதைப்போல குடும்ப வாழ்க்கையைப் பாதிக்

கும் தவறு வேறெதுமில்லை என்று சொல்லலாம். இந்த மடமையின் காரணமாக எத்தனை பெண்மணிகளின் வாழ்க்கை பாழாகிறது என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். தொன்று தொட்டுவரும் பெண்ணடிமை மனப்பான்மையின் நச்சுப்பழக்கங்களின் வரிசையில் இச்செயலும் ஒன்றாகும்.

ஆனால் குழந்தைப் பேறு இல்லாமல் போவதற்குக் காரணமென்ன என்பதில் விஞ்ஞான ரீதியாகத் தெரிந்து கொண்டால், அந்த மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கு வழியையும் தெரிந்து நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.

கரு உற்பத்தியாவதற்குக் கீழ்க்காணும் முக்கியமான நாலு காரணங்கள் நிகழவேண்டும்.

1. ஆணினுடைய விதைக் கொட்டைகள் கோளாறில்லாத, இயற்கையான விந்து அணுக்களை, போதிய அளவில் உற்பத்தி செய்யவேண்டும். அப்படி உற்பத்தியாகும் உயிர் அணுக்கள் தடையின்றி யோனித்துவாரத்தின் வழியாக கருப்பையின் வாயை அடைவதற்கு ஏதுவாக இருக்கவேண்டும்.

2. கருப்பைக்குச் செல்லும் வழியானது கோளாறின்றியும் சுத்தமாகவும் இருக்கவேண்டும். இந்த வழி தான் கருப்பையும் யோனித் துவாரத்தையும் இணைப்பது.

3. பெண்ணினுடைய கருப்பையின் மேல் பாகத்திலுள்ள குழாய்களுக்கு, ஆணினுடைய விந்து தடையின்றி வந்து சேர வேண்டும்.

4. அதே மாதிரியே அண்டகோசத்திலிருந்து வெளியான முட்டை, தடையின்றி கருப்பைக் குழாய்க்குள் வந்து சேரவும் வழியிருக்கவேண்டும். அண்டகோசமும் தகுதியான முட்டைகளை வெளியிடும்

சக்தி பெற்றிருக்க வேண்டும். இவைகளில் ஏதாவது ஒன்று தடைப்பட்டாலும், ஓரளவு மலட்டுத் தன்மை ஏற்படக் காரணமாகிறது இப்படித் தடை ஏற்படுவதற்கும் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.

சில பெண்கள் புணர்ச்சி நிகழ்ந்த உடனேயே கருத்தரிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆனால் பல பெண்கள் இவ்விதம் உடனடியாக கருவுருவதில்லை. அவர்கள் கருத்தரிக்க சில மாதங்களோ சில வருஷங்களோ பிடிக்கும். இதில் பல ரகம் உண்டு. சில பெண்கள் சிற்சில காரணங்களால் கருத்தரிக்காமலேயே போய்விடுகிறார்கள்.

## நிரந்தர மலடு

ஜனனேந்திரிய உறுப்புக்கள் இல்லாமலே போய்விடுதல், வியாதியின் காரணமாக அழிவுறுதல் அல்லது சுருங்கி மெலிந்துபோதல் ஆகிய காரணங்களால்தான் நிரந்தர மலடு ஏற்படும் என்று மீக்கர் என்னும் அறிஞர் கூறுகிறார்.

பெண்ணினுடைய ஜனனேந்திரிய உறுப்புக்கள், மாதவிடாய் நின்று இரண்டொரு வருஷங்களுக்குப் பிறகு சுருங்கிவிடுகின்றன. இது ஹார்மோன் சுரபிகளின் வேலை நின்று விடுவதால் ஏற்படுகிறது.

## தற்காலிக மலடு

சாதாரணமாக நூறு தம்பதிகளை எடுத்துக்கொண்டால் பத்துத் தம்பதிகள்தான் மணமான மிகக் குறுகிய காலத்திற்குள் சிசுவுற்பத்தியில் வெற்றி பெறுகிறார்கள். மற்ற தொண்ணூறு பேர்களின் கருத்தரிக்கும் காலம் வெவ்வேறு விதமாக மாறுபடுகிறது. சிலர் மணமான ஒரு மாதத்

திற்குள்ளேயே கருவுருகிறுர்கள். இன்னும் சிலருக்கு ஒரு வருஷமும் அதற்குமேலும் கூடப்பிடிக்கலாம். அபூர்வமாகச் சில தம்பதிகளுக்குக் கருத்தரிக்காமல் இருப்பதென்பதே முடியாத காரியமாக இருக்கிறது. என்னதான் கண்டிப்பான கர்ப்பத்தடை முறைகளை அனுசரித்த போதிலும் பத்தாவது மாதத்தில் "தம் மக்கள் மழலைச்சொல் கேட்க" வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டுவிடுகிறது.

இதையெல்லாம் தவிர, சில தம்பதிகள் வருஷக் கணக்காக கருத்தரிக்காமல் இருக்கிறுர்கள். இப்படியிருப்பதை சிகிச்சை முறையால் நிவர்த்திக்க முடியும். சில சமயங்களில் இயற்கையாகவே இந்த மலட்டுத்தன்மை மாறிவிடுகிறது இதைத்தான் "தற்காலிக மலடு" என்று குறிப்பிடுகிறுர்கள்.

## அரை குறை மலடு

சில பெண்கள் ஒன்றிரண்டு குழந்தையைப் பெற்றுவிட்டு பின்னர் கருத்தரிக்கும் தன்மையை இழந்துவிடுகிறுர்கள். இன்னும் சிலர் இரண்டொரு முறை கருச்சிதைவு ஏற்பட்டபின் கருத்தரிக்காமலேயே இருந்துவிடுகிறுர்கள். இதைத்தான் 'அறைகுறை மலடு' என்பது.

நிரந்தர மலடாவதற்குரிய காரணங்களை மேலேயே சொன்னேம். ஜனனேந்திரிய உறுப்புக்களே இல்லாமல் போவது (அலி) மிகவும் அபூர்வமான செயல், ஆனுல் இந்த உறுப்புகள் சுரபிகளின் வேலை சரிவர நடைபெருததால் போதிய வளர்ச்சியின்றிப் போவது சாதாரணமாக நிகழக் கூடியதுதான். இதையெல்லாம் முன்பு நிரந்தரமாக மலடாகிவிட்டதாகவே நம்பினுர்கள். ஆனுல் இப்பொழுது வைத்திய முறைமூலம் ஹார்மோன் சுரபிகளைச் சரிப்படுத்தி, ஜனனேந்திரிய உறுப்புகளை வளமுறச் செய்து

கருத்தரிக்கச் செய்யலாம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஜனனேந்திரிய உறுப்புக்கள் சிற்சில வியாதிகளின் காரணமாக முற்றிலும் அழிந்துவிடுவதுண்டு. அப்படி நேர்ந்துவிட்டால் அந்த மலட்டுத் தன்மையைப் போக்க முடியாது.

சிற்சில ஆண் பெண்களுடைய அவயவங்கள் முரண்பட்ட ரீதியில் அமைந்துவிடுவதுதான் தற்காலிக மலட்டுத் தன்மையை உண்டாக்குகிறது. ஆண் குறியின் லிங்கத்தின் நுனிப் பாகத்தில் இருக்கவேண்டிய துவாரம் சில சமயங்களில் சற்று தள்ளிக் கீழேயோ, அல்லது முற்றிலும் அடிப்பாகத்திலோ அமைந்துவிடுவதுண்டு. இவ்விதம் மிகமிகத்தள்ளிக் கீழே அமைந்துவிட்டால் புணர்ச்சிக் காலத்தில் விந்து பெண்ணின் யோனித் துவாரத்துக்குள் வெளியாகாமல் வெளியே வடிந்துவிடுகிறது. இந்தக் குறையை ஆபரேஷன்மூலம் குணப்படுத்தலாம்.

சில பெண்களுக்கு வயதுவந்த பிறகும்கூட, யோனியில் துவாரம் இல்லாமல், 'ஹைமன்' என்ற ஜவ்வு அடைத்துக்கொண்டு சிறுமிகளுக்கு இருப்பதைப் போல் இருக்கிறது. இவ்விதம் அமைந்துவிட்டால் மாதவிடாய் தடைப்படுகிறது. இவ்விதமான நிலையில் பதினெட்டு பத்தொன்பது வயதைக்கூட அடைந்துவிடுகிறார்கள். வெளித்தோற்றமும், அங்க அமைப்பும் பருவமடைந்த பெண்ணாகவே காட்டும். இந்தக் கோளாறையும், ஆபரேஷன் மூலம் ஜவ்வை அப்புறப்படுத்தி நிவர்த்தி செய்யலாம்.

இன்னும் சில பெண்களுக்கு கருப்பப் பையின் மேலே அமைந்துள்ள குழாய்கள் அடைபட்டுத் தூர்ந்து போயிருப்பதுண்டு. இவ்விதம் இருப்பதால் அண்டகோசத்திலிருந்து வெடித்த முட்டை கருப்பப் பைக்கு வரமுடியாமல் போய்விடுகிறது. இதையும் ஆபரேஷன் மூலம் குணப்படுத்தலாம்.

சம்போக முறைகளில் தவறு ஏற்படுவதன் மூலமும் மலடு ஏற்படும். இந்தக் குறையைச் சுலபமாகப் போக்கிக் கொள்ளலாம் !

மிகவும் அதிகமாக, வெவ்வேறுவிதமான மருந்துகளைச் சாப்பிடுவதால் தற்காலிகமான மலட்டுத்தன்மை ஏற்படுவதுமுண்டு. இந்தக் கோளாறு பெரும்பாலும் ஆண்களைத்தான் — ஆண்களின் விந்து உற்பத்தியைத் தான்—பாதிக்கிறது. மிகவும் கொடுமையான இன்புளுயென்ஸா சுரத்தினுல் பாதிக்கப்பட்டாலும், தொடர்ந்து மிகைப்பட்ட சக்திக்கு மேற்பட்ட சரீர உழைப்பு ஏற்பட்டாலும் ஆணுக்கு மலட்டுத்தன்மை ஏற்படுவதுண்டு. அதே மாதிரி சிற்சில வியாதிகளால் பெண்களுடைய அண்டகோசமும் அதன் முட்டை உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. நீரிழிவுபோன்ற வியாதிகள், அதிகமாக போதை வஸ்துக்களை உபயோகித்ததால், தந்தரோகத்தின்மூலம் உண்டாகும் சில விஷ சத்துக்கள் உடம்பில் கலத்தல் முதலியவைகளாலும் தற்காலிக மலடு ஏற்படச் சந்தர்ப்பமுண்டு.

கூவைக்கட்டு, பிட்டாலம்மன், பொன்னுக்கு வீங்கி என்ற பல்வேறு பெரிய நாமதேயங்களைக் கொண்ட ஒரு சிறிய வியாதி இருக்கிறது. இதைப்பற்றி நாம் அலட்சியமாக இருந்துவிடுகிறோம் ஏதோ வீங்குகிறது வற்றிவிடுகிறது என்று. இந்த வியாதி பருவமடைந்த பின் வந்தால் மலட்டுத்தன்மையை உண்டாக்குகிறது. முக்கியமாக ஆணினுடைய விந்து உற்பத்தி இதனுல் பாதிக்கப்படுகிறது.

## உணவு முறை

முக்கியமாக உணவுமுறைகளினுலும் மலட்டுத்தன்மை உண்டாவதுண்டு. சாதாரண உணவுகளைத் தவிர, வைட்டமின் சத்துள்ள உணவு வகைகளையும் நாம் முக்கியமாக உட்கொள்ள வேண்டும். இந்தச் சத்து உடல் வளர்ச்சிக்கு

மட்டுமின்றி ஜனனேந்திரிய உறுப்புகளின் சக்தியையும் வளர்ப்பதற்குத் தேவைப்படுகிறது. விந்து அல்லது முட்டைகளை ஆனோ பெண்ணோ உற்பத்தி செய்ய வைட்டமின் சத்து அவசியம். முட்டைக்கோஸைப் போன்ற லெட்டஸ் என்ற கீரை வகையிலும், முளைக்கொட்டிய தானியம், பயறு வகைகளிலும் வைட்டமின் E சத்து அதிகம் கிடைக்கிறது.

சாதாரணமாக ஒரு பெண் எலிக்கு, மற்ற சத்துக்கள் எல்லாம் நிரம்பிய உணவை இட்டுவந்தால் அது புஷ்டியாக வளர்ந்து, ஜனனேந்திரிய உறுப்புகள் சரியாக வேலை செய்து கருத்தரிக்கிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் இந்தக் கரு வளர்ச்சி தடைபட்டு நின்றுவிடுகிறது. பின்னர் வைடமின் E சத்தை ஊட்டினால் மறுபடியும் கரு போஷணை பெற்று வளருகிறது.

அதேமாதிரி பெண்கள் கர்ப்பம் உண்டாவதற்குப் போதிய அளவு வைட்டமின் E சத்து தேவை. சாதாரணமாக பெரும்பாலான பெண்களுக்கு, அவர்களுடைய அன்றாட உணவுகளிலே இந்த சத்து கிடைத்துவிடுகிறது. ஆனால் சிலருக்கு இந்த E சத்துள்ள ஆகாரத்தை உபரியாக உட்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மலட்டுத் தன்மை ஏற்படுகிறது. இந்த E சத்து தேவையா இல்லையா என்பதை டாக்டர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியது. அவ் வைடமின் E சத்து இல்லாததால் தான் கருச்சிதைவும், வேறு பல கர்ப்பாசய நோய்களும் ஏற்படுகின்றன.

## மனம் சம்பந்தப்பட்ட காரணங்கள்

சில சமயங்களில் மனம் சம்பந்தப்பட்ட காரணங்களும் மலட்டுத்தன்மையை உண்டாக்குகிறது. உதாரணமாகச் சில பெண்களுடைய யோனித்துவாரம், மணமான புதிதில் புணர்ச்சிக்கு ஏற்றதாக இல்லாமல் சுருங்கியிருக்கும்

இப்படி இருப்பதற்கு, பயம் அல்லது வெறுப்பு போன்ற மன வியாதிகளே காரணம். இப்படிச் சுருங்கி யிருக்கும் சமயம், தன் மனைவியின் பயம் அல்லது வெறுப்பை மனம் விட்டுப் பேசிப் போக்கிவிட்டு பின்னர் படிப்படியாகக் கேளிக்கைகளில் ஈடுபட்டு, புணர்ச்சிக்குத் தயார் செய்ய வேண்டியது ஆணின் கடமை. அப்படியல்லாமல், வெறி கொண்டதனமாக வலுக்கட்டாயமாக, பலாத்கார முறையில் புணர்ச்சி செய்வது பெண்ணுக்கு வலியையும், தொந்தரவையும் கொடுக்கிறது. ஆகையால் ஏற்கெனவே நிறைந்துள்ள பீதியும் வெறுப்பும் அதிகரித்து விடுகிறது. இதனால் பெண்ணின் மனோநிலை பாதிக்கப்படுகிறது. இந்த மனோவியாதியும் தற்காலிக மலட்டுத் தன்மைக்குக் காரணமாக அமையலாம்.

மனோவியாதிக்கு மற்றொரு காரணம் துரிதமாக விந்து ஸ்கலிதமாகுதல். கல்யாணமான புதிதில் இவ்வித துரித ஸ்கலிதம் ஏற்படுவது சகஜம். ஆனால் அது விரைவிலேயே நின்றுவிடும். மணமாகி வெகு நாட்களுக்குப் பின்னும் துரித ஸ்கலிதம் இருந்து வருமேயானால் கவனித்துத் தவிர்க்க வேண்டும். நரம்பு நடுக்கம், அதிகமான புணர்ச்சியில் ஆசை ஆகியவை இந்த துரித ஸ்கலிதத்துக்குக் காரணமாக அமையும். இவ்விதம் ஆவதால் புணர்ச்சியில் இருபாலாருக்கும் அதிருப்தியும், ஏமாற்றமும் ஏற்பட்டு மனோவியாதியால் பீடிக்கப்படுகிறார்கள். மனோவியாதி மலட்டுத்தன்மையை உண்டாக்குகிறதென்பதை ஏற்கெனவே பார்த்தோம்.

## ஜோடி மாற்றமும் மலடு நீக்கமும்

விவாகரத்து முறை சர்வ சகஜமாக உள்ள ஐரோப்பிய நாடுகளில், மணமாகி வருஷக் கணக்கில் பிள்ளையில்லாமலிருந்தால் விவாகரத்து செய்துகொண்டு, ஆணும் பெண்ணும் வேறு ஜோடியைத் தேர்ந்தெடுத்து மறு விவாகம் செய்துகொள்கிறார்கள், இப்படி மாற்று

விவாகம் செய்தபின்னர் பலருக்கு திடகாத்திரமான குழந்தைகள் பிறந்துள்ளன. இதற்குக் காரணம் உடற் கூறுக் கோளாறல்ல, உளக்கூறுதான். புதிய கல்யாணம் மூலம் முன்னர் வேரூன்றியிருந்த மனோவியாதி களைந்தெறியப் பட்ட பின்னர் மலடு நீங்குகிறதென்று ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள்.

## விந்துக் குறைவு

ஆண்மலடு இல்லாமலிருக்க வேண்டுமானால், ஏராளமான ஜீவ விந்துக்களை உடையவனாக இருக்கவேண்டும். விரைவாக கொட்டைகளிலிருந்து போதிய அளவு விந்து உற்பத்தி நடைபெறவில்லையானால் ஹார்மோன் சுரபிகள் சரிவர வேலை செய்யவில்லை என்றுதான் அர்த்தம். விரைக் கொட்டைக்குள் அமைந்திருக்கும் விந்து உற்பத்தி நாளங்களின் உட்புறங்களைக் கூவைக்கட்டு வீக்கம், அல்லது பெண் வியாதிகள் அழித்துவிடுகின்றன. இதன் மூலமும் விந்துக்குறைவு ஏற்படுகிறது. விரைக்கொட்டையிலிருந்து உற்பத்தியாகும் விந்து ஆண்குறிக்கு வந்துசேரும் விந்துக் குழாய்களிலே அடைப்பு ஏற்பட்டு விந்துக் குறைவு ஏற்படுவதும் உண்டு. இவ்விதம் தடைப்பட்டு விட்டால் ஜீவ விந்துக்களுக்குப் பதிலாக வெறும் சுக்கில நீர்மட்டும் புணர்ச்சி காலத்தில் வெளியாகும் அந்த சுக்கில நீரிலே இரண்டொரு விந்துகள் இருந்தாலும் இருக்கலாம் அல்லது முற்றிலும் இல்லாமலேயும் போய்விடும். (இவ்விதம் கருத்தடை ஆபரேஷன் செய்து கொண்டால்தான் சாதாரணமாக நிகழும்.)

அடிக்கடி மிதமிஞ்சிய சம்போகம் செய்வதாலும் விந்துக் குறைவு ஏற்படும். இவ்வித அமித போகத்தால் கருத்தரிக்காமல் போவதற்கு சந்தர்ப்பமிருக்கிறது. கருத்தரிப்பதற்குரிய நாள் மாதவிடாயாகிய, சுமார் 14-வது நாள்

தான் என்று ஏற்கெனவே குறிப்பிட்டோம். அடிக்கடி புணர்ச்சி ஏற்படுவதால் முட்டைகள் போதிய பக்குவத்துடன் வளர்ச்சியடையாமல் "பிஞ்சிலேபழுத்து" வெடித்து வந்துவிடுகின்றன. இவ்வித முட்டையுடன் மிதமிஞ்சிய போகத்தால் அளவு குறைந்து பலவீனமாகியுள்ள விந்து, ஊடுருவிப் பாய்ந்து கருவுற முடியாமல் போய்விடுகிறது.

## அரைகுறை மலடு

அரைகுறை மலடு என்றால் என்ன என்பதை ஏற்கெனவே கூறியிருக்கிறேன். அது எற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை இங்கே பார்ப்போம். இவ்விதம் மலடு ஏற்படுவது பெண் குறியில் ஏற்படும் ஒருவித நோயால்தான்.

பெண் குறியில் ஒருவித வெள்ளையான சளி போன்ற வஸ்து உண்டாவது வழக்கம். அதைச் சாதாரணமாகச் 'சூடு' என்றும், 'வெள்ளை' என்றும் பெண்கள் குறிப்பிடுவதுண்டு. இவ்விதம் உண்டாகும் வெள்ளையானது ஒரு குறிப்பிட்ட அளவு இருக்கவேண்டும். சாதாரணமாக வேண்டிய அளவு இருந்தால் பெண்ணினுடைய சுகாதாரத்துக்கு அது மிகவும் பயன்படுகிறது. இந்த வெள்ளையில் கண்ணுக்குத் தெரியாத உயிர்ப்பொருள்கள் நிரம்பி யிருக்கின்றன. அவை ஒருவித திரவத்தைச் சுரக்கின்றன. இந்த உயிர்ப் பொருள்கள் சாதாரணமாக ஒருவிதக் கெடுதலும் விளைவிக்கமாட்டா.

ஆனால் சில பெண்களுக்கு இது தேவையைவிட அதிகமாக உற்பத்தியாகிறது. அதிகமாக உண்டாகும் இந்தத் திரவம், ஆணினுடைய விந்து உள்ளே நுழைந்த மாத்திரத்திலேயே அவற்றைக் கொன்றுவிடுகின்றன. இந்தக் காரணத்தால் அரைகுறை மலடு ஏற்படுகிறது. ஆனால் ஆணி

னுடைய விந்து சக்தி வாய்ந்ததாகவும், அளவில் அதிகமாகவும் இருந்தால், பெண்ணினுடைய இந்த வெள்ளைத் திரவத்தை வென்று உயிருடன் கர்ப்பப் பைக்குச் சென்று விடுகின்றன.

வெள்ளைத் திரவம் யோனியின் வெளி மடிப்புகளிலும், உள் மடிப்புகளிலும் யோனித் துவாரத்தின் வெளிப் புறத்திலும் மட்டுமே இருக்கும். ஆண்குறி பெண்ணினுடைய கர்ப்பப்பையின் வாய் விளிம்போரமாக இணைந்தபடி விந்தை பீச்சுமேயானால், இந்த வெள்ளை திரவத்தின் வேட்டையிலிருந்து சுலபமாகத் தப்பிப் பிழைத்துவிடும்.

சிற்சில பெண்களுக்கு கர்ப்பப்பையின் வாய் மிகவும் சிறியதாக இருக்கும். எவ்வளவு சிறியதாக இருந்தாலும் விந்து ஊடுருவிப் பாய்ந்து நுழைந்து சென்றுவிடும். ஆனால் அந்தக் குறுகிய வழியையும் வெள்ளை அடைத்துக்கொள்ளுமேயானால் கரு உற்பத்தியாகாது. இவ்வித சங்கட நிலையை ஆபரேஷன் மூலம் கர்ப்பப்பையின் வாயை அகலப் படுத்தி நிவர்த்திக்க முடியும்.

இந்த வெள்ளை உற்பத்தி உஷ்ண காலத்திலும், வியாதியால் பிடிக்கப்பட்ட காலத்திலும் குழந்தை பிறந்த சமயத்திலும் அதிகமாக இருக்கும். இப்படி அதிகமாக இருக்கும் சமயத்தில் புணர்ச்சி செய்தல் கூடாது. ஏனெனில் ஆண் குறியை நுழைக்கும்போதும், புணர்ச்சி அசைவுகளை நடத்தும்போதும், ஆண்குறியின் மூலமாக வெளிப்புறமாக இருந்த வெள்ளை யோனித் துவாரத்தின் உள்புறத்திற்குச் சென்று, கர்ப்பப் பைக்கும் சென்றுவிடும். குழந்தை பிறந்த பின்னர் கர்ப்பப் பைக்குள் இந்த வெள்ளை புகுந்துவிட்டால் பாதகம் ஏற்படுகிறது. அதேமாதிரி கருவுற்ற கடைசி மாதங்களிலும் புணர்ச்சி செய்தல் கூடாது.

சில ஆண்கள் மிக அதிகமாக கரு உற்பத்தி செய்யும் சக்தியைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய சம்போக

காலத்தில் ஏராளமான ஆரோக்கியமுள்ள விந்துகள் வெளி வருகின்றன.

விரைக்கொட்டையிலிருந்து, விந்து பரிபூர்ண வளர்ச்சி யடைந்து வெளிவரவேண்டும். அப்படி யில்லாவிட்டால் கோளாறு ஏற்படுகிறது. சாதாரணமாக வளர்ச்சியடைந்த ஒவ்வொரு ஜீவ விந்துக்கும் ஒரு தலை, ஒரு உடல், ஒரு வால் ஆகியவை இருக்கின்றன. விந்து வளர்ச்சியடையா விட்டால் சில விசித்திரமான சம்பவங்கள் நிகழுகின்றன.

சில விந்துக்களுக்குத் தலை பெரிதாக இருக்கும். சில வற்றுக்கு உடல் சரியாக இராது; நீளமாக இருக்கும். குட்டையாக இருக்கும். வால் இல்லாமல் இருக்கலாம். அல்லது இரட்டை வால் முளைத்திருக்கும்.

ஒரு சம்போகத்தில் உண்டாகும் ஜீவ விந்துக்களில் இவ்வித 'சொத்தை விதைகள்' நல்ல திடகாத்திரமான மனிதனுக்கும்கூட குறைந்த அளவில் இருக்கத்தான் செய் யும். இந்தச் சொத்தை விந்துக்கள் அதிகமாக அதிகமாக கரு உற்பத்தி சக்தியும் குறைந்துகொண்டே வருகிறது. ஐந்தில் ஒரு பங்குக்கு மேலும் இந்தச் சொத்தைகள் அதிகப் படுமேயானுல், மலடு ஏற்படுவது நிச்சயம்.

இவ்விதம் பல்வேறு விதமான மலட்டுத்தன்மைகள் இருக்கின்றன; குழந்தை பிறக்கவில்லையானுல், மந்திரத்தை யும், மாயத்தையும் நம்புவதைவிட டாக்டரை நம்புங்கள். அவர் ஆணையும் பெண்ணையும் பரிசோதித்து நிவர்த்திக்கு வழிதேடித் தருவார்.

"புத்" என்னும் நரகத்திற்கு போகாமல், நேரே சுவர்க் கத்திற்குப் போய்ச் சேரக்கூடிய "துரு டிக்கெட்டை" டாக்டர் கொடுப்பார்.

ஆபரேஷன் மூலமாகவோ, மருந்துகள் மூலமாகவோ, ஆகாரம், டானிக் மூலமாகவோ மலடைத் தீர்த்துக்கொள்ள லாம்.

ஜனனேந்திரியங்கள் முழுக்க முழுக்க பாதிக்கப்பட்டாலொழிய, மலடு நிவர்த்தி மிகவும் சுலபமான, காரிய சாத்தியமான செயலேயாகும்.

சந்ததி என்பது மிக நீண்ட சங்கிலித் தொடர் (நாம் நமது தந்தை, பாட்டன், அவருக்குப் பாட்டன் என்று கணக்கிட்டுப் பார்த்தால்) ஆதியில்லாதது. இதே மாதிரி அந்தமும் இருக்கக்கூடாதென்றுதான் ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள். இந்தச் சங்கிலித் தொடரை நமக்குப் பின்னாலும் நீட்டிக்கொண்டு போவதற்குத்தான் மக்கட்பேறு தேவை. மலடுஎன்றவெட்டுளி சந்ததி என்ற பொற் சங்கிலியை அறுத்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். உசிதமான காரியம் என்பதையும் ஞாபகப் படுத்துகிறேன்.

## மணமக்கள் வாழ்க !

மலரோடு மணமாக மணமக்கள் வாழ்க !
மகிழ்வோடு புகழோடு மணமக்கள் வாழ்க !
புலர்கின்ற பொழுதோடு மாடத்துலாவும்
புறவென்ன மனமொத்து மணமக்கள் வாழ்க !
கலையோடு மொழியன்பு நாட்டன்பு போற்றும்
கண்ணான மணமக்கள் சிலம்பேற்று தமிழர்
நிலையான மனைமாட்சி வழுவாது போற்றி
நீடூழி மணமக்கள் அவர்மக்கள் வாழ்க !

கவிஞர் குறிப்பிடுவதைப்போல, மலரோடு மணமாகவும் மனமொத்த புறவாகவும் மணமக்கள் வாழவேண்டுமென்றுதான் நான் மனமார வாழ்த்துகிறேன்.

ஆனால் மணமக்கள் எந்த உலகத்தில், எந்த சமுதாய சூழ்நிலையில் வாழுகிறார்களோ அதைப் பொறுத்துத்தான் அவர்களுடைய மனமகிழ்வும் ஆனந்த வாழ்க்கையும் இருக்க முடியும்.

ஆணும் பெண்ணும் எவ்வளவுதான் காதலித்து மனம் ஐக்கியப்பட்டிருந்தாலும், அவர்களுடைய வாழ்க்கை இன்பம் நிறைந்ததாக இருக்க. பொருளாதார வசதியிருக்க வேண்டும். பிச்சை யெடுத்தாலும் மனமொத்த காதல் வாழ்வு ஆனந்தமானது என்று சாதாரணமாகச் சொல்லி விடலாம். ஆனால் எத்தனை பேருக்கு இது சாத்தியமாக முடியும் என்று எண்ணிப் பாருங்கள். ஒரு சில லட்சிய பகற்கனவு வாதிகளுக்குத் தவிர மற்றவர்களுக்கு முடியாது

'முன்னணி' என்னும் தமது பத்திரிகையில் கவிஞர் குயிலன் ஒரு கதை எழுதியிருந்தது எனக்கு இந்த இடத்தில் ஞாபகம் வருகிறது. கதைக்குப் பெயர் காதல் கதை. அதன் சாராம்சம் வருமாறு :—

ஒரு பணக்கார மேல்குலத்து வாலிபன், ஒரு ஏழையான தாழ்குலத்து அழகியைக் காதலிக்கிறான். உயிருக்குயிராக இருவரும் நேசிக்கிறார்கள். அவர்களுடைய காதலுக்கு ஜாதியும், பொருளாதார ஏற்றத்தாழ்வும் குறுக்கே நிற்கின்றன. பொருளையும் ஜாதியையும் துறந்து தன் காதலியை அழைத்துக்கொண்டு வெளியேறுகிறான். ஆனால் காதலர்களுக்கு மட்டும் வயிறு கிடையாதா என்ன? கஷ்டப்பட்டு ஒரு வேலை தேடுகிறான். குழந்தை குட்டிகள் பிறக்கின்றன. வறுமை அதிகரிக்கிறது. குடும்பபாரம் கோபத்தையும் தாபத்தையும் உண்டாக்குகிறது. காதல் உள்ளத்தின் அடித்தளத்திலே அமுக்கப்படுகிறது. பொருளாதார வறுமையும், சமூகமும் காதலைச் சவக்குழி தோண்டிப் புதைத்துவிடுகின்றன.

"பொருளாதார ஏற்றத்தாழ்வும், நிரந்தரமான வாழ்க்கையற்ற தன்மையும், ஜாதி முரண்பாடும், மடமையும் இல்லாத ஒரு சமூகத்தில்தான் காதலனும் குடும்ப வாழ்க்கையும் சிறக்க முடியும்" என்று முடிகிறது கதை.

இதில் அடங்கியுள்ள உண்மையை நாம் சற்று நிதானமாக ஆராயவேண்டும். குடும்ப வாழ்க்கை நல்ல முறையில்

நடக்க பொருள் வசதிவேண்டும். ஒருவேளை இன்றைக்கு நாம் பொருள் வசதி படைத்தவர்களாக இருக்கலாம். ஆனால் இந்த முதலாளித்வ சமுதாயத்தில் புயற்காற்று மணல் மேடு போல்தான். செல்வம் இடம் மாறுகிறது; கரைகிறது; வளர்கிறது.

எனவேதான் "அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம் சகடக்கால் போல வரும்" என்றார் நாலடியார். "எழுநிலை மாடம் கால்சாய்ந்து, கழுதைமேய் பாழ் ஆனாலும் ஆகும்" என்றார்கள். "குடை நிழலிலிருந்து குஞ்சரம் ஊர்ந்தவர்கள், நடையமெலிந்தோரூர் நண்ணுவதும் அலத்திடு பிச்சை கூவி இரந்தவர் அரசாள்வதும்" சகஜமாகியுள்ளது.

இப்படிப்பட்ட உலகத்திலே எதை நீங்கள் நிரந்தரமென்றும் உறுதியென்றும் சொல்ல முடியும்?

எனக்குத் தெரிந்த தோழி ஒருத்தி, ஒரு இளம் வாலிபனைக் காதலித்தாள். அவன் அழகன். அறிவு நிரம்பியவன். ஆனால் ஏழை! இருவரும் விவாகம் செய்துகொள்ள எவ்வளவோ பாடுபட்டார்கள். முடியவில்லை. பெண்ணின் பெற்றோர்கள் மறுத்துவிட்டனர். ஏழைக்குக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டனர். பெண்ணாலும் பெற்றோர்களை முற்றிலும் தட்டிவிட முடியவில்லை.

கடைசியில் வேண்டா வெறுப்பாக, ஒரு பணக்கார வாலிபனைக் கல்யாணம் செய்துகொண்டாள். ஆனால் அவள் மனம் ஒப்பியா செய்துகொண்டாள். இல்லை. அப்படியானால் அர்த்தமென்ன?

தன்னுடைய பெற்றோர்களுடைய மனதைச் சந்தோஷப் படுத்தவும், அவர்கள் விரும்பும் பொருளுக்கும் போலி கௌரவத்துக்காகவும், தன்னுடைய உடலை முன்பின் பழகி அறியாத ஒருவனுக்கு விட்டுக்கொடுத்தாள். சுருக்கமாகச் சொன்னால் உடலை விலைக்கு விற்றாள். இதற்குப் பெயரென்ன?

ஆனால் இந்த உலகம்தான் நிரந்தரமற்றதாச்சே! இவளுடைய வாழ்க்கையிலும் அதுதான் நடந்தது.

இவள் இரண்டொரு பிள்ளைகளைப் பெற்றாள் வேண்டாத புருஷனோடு நரகவாழ்க்கை நடத்தினாள். குடும்பத்தில் பிணைப்பு இல்லாததால் அவளுடைய கணவன் வேறு வழிகளில் திரும்ப ஆரம்பித்தான்.

காலம் சுழன்றது. பணக்காரன் ஏழையானான்! உணவுக்கும் சிரமம் ஏற்பட்டது! குழந்தைகளைப் படிக்க வைக்கக்கூட சிரமப்பட அலைந்தனர்.

ஆனால் யாரை ஏழை என்று நிராகரித்து ஒதுக்கிவிட்டார்களோ இவளுடைய பெற்றோர்கள், அவன் யுத்த காலத்திலே பணம் பெருக்கிவிட்டான். காரிலே பறந்தான். பங்களாவின் பஞ்சு மெத்தையிலே புரண்டான். ஆனால் அவனுடைய வாழ்க்கையிலும் காதல் தலைகாட்ட முடியவில்லை. அவனுடைய வாழ்க்கை யந்திரமாக நடந்துவந்தது.

பார்த்தீர்களா? செல்வம் சகடக்கால் போல வந்தது! ஆனால் அந்தச் சகடக்காலிலே மனித ஜென்மங்கள் பலியாகின்றனர். இதுதான் இன்றைய உலகம்!

அதேமாதிரி இன்னொரு விஷயம்!

'செல்வம்தான் சகடக்கால் போல வருமே' என்று சொல்லிக்கொண்டு ஏழை வாழ்க்கை நடத்ினால் காதல் வாழ்வு நிலைத்து நிற்கிறதா?

பகல் பூராவும் காரியாலயத்தில் கடும் உழைப்பு செய்துவிட்டு, மாலையில் வீட்டை நோக்கி வருகிறான். தன்னை அன்புடன் வரவேற்கும் ஒரு காதல் முகத்தை எதிர்பார்க்கிறான். காதல் முகம் சோம்பிக்களை இழந்தபடி காத்திருக்கிறது. வந்ததும் வரவு கூறி உபசரிக்கவா? இல்லை?

"வீட்டில் உப்பில்லை. புளியில்லை, பால்காரன் வந்து மிரட்டிவிட்டுப் போகிறான். வீட்டு வாடகை கொடுக்காததால் காலிசெய்யச் சொல்லி நோட்டீஸ் வருந்திருக்கிறது!" இப்படிப்பட்ட புகார்களுடன் எதிர்கொண்டழைக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் அவனுக்குக் கோபமும் எரிச்சலும் வராதா என்ன? எரிச்சலை யார்மீது காட்டுவது? மனைவி மீது சொல்லம்புகள் பாய்கின்றன, "போதுமடா இந்த வாழ்க்கை" என்ற விரக்தி வேதாந்தம் பொத்துக்கொண்டு வருகிறது. இதுவரையிலும் ஆபீஸில் பூனை வேஷம் போட்டுத் திரிந்து அலுத்த அவன், வீட்டிற்குள் நுழைந்ததும் புலிவேஷம் போடுகிறான். சீறுகிறான் உருமுகிறான்.

ஆனால் அவள் என்ன செய்வாள்! பாவம்! பகல் பூராவும் குழந்தைகளைக் கட்டி மேய்க்க முடியாமல் தவித்தாள். இளைய பெண் "ஐஸ்புருட்டுக்கு" அழுது பிடிவாதம் பிடித்தது. கையில் காசில்லையாதலால் 'ஐஸ்புருட்' முதுகில் பழுத்தது. அவளுடைய கைதான் குழந்தையை அடித்தது. ஆனால் அவள் அடித்த அடி அவளுடைய உள்ளத்திலும் உயிரிலும் அல்லவா விழுந்தது.

பால்காரன், வீட்டுக்காரன், பக்கத்துவீட்டு பருப்புக் கடன் என்று எத்தனையோ கடனுக்குப் பதில் சொல்லி அலுத்துப்போனாலும், அவளுக்கும் புருஷன்பேரில் ஆசை இல்லாமலில்லை. அவளுடைய வெறுப்பெல்லாம் வறுமையின் பேரில். கிடைக்காத பணத்தின் பேரில்.

இவ்விதம் வாழ்க்கை நடந்தால் எப்படி இன்பம் இருக்கமுடியும், உள்ளத்திலே அமைதியும் அன்பும் நிலவ முடியும்?

இன்று நாம் சுகமாக இருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். ஏதோ இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. ஆனால் நாளை நிலைமை மாறினால்? குழந்தைகளைப் படிக்க வைக்க முடியுமா? நல்லதை வாங்கிக் கொடுத்து மகிழ முடியுமா?

எனவேதான், நாம் நிம்மதியாக சந்தோஷமாக, காதல் நிரம்பிய வாழ்வு வாழவேண்டுமானால் சமுதாயமும் அதற்கேற்ற சமுதாயமாக இருக்க வேண்டும்.

நம்மைச் சுற்றிலும் வறுமையும் துக்கமும் சூழ்ந்திருந்தால் நாம் மட்டும் எப்படி நிம்மதியாக வாழ முடியும்.

நாம் சந்தோஷமாக மட்டும் இருந்தால் போதுமா? ஒரு பெண் புகுந்த இடத்தில்—புருஷன் வீட்டில் வெகு சௌகர்யத்தோடு இருக்கிறாள். பெரிய பங்களா, வீடு நிறைய அழகுச் சாமான்கள். கூப்பிட்டவுடனே ஏனென்று கேட்க வேலையாட்கள், உடம்பு முழுவதும் நகை, உடுத்துவதற்குப் பட்டுப் பகட்டாடைகள். உலவி வருவதற்கு 'ரோல்ஸ் ராய்ஸ்' கார். இத்யாதி, இத்யாதி!

ஆனால் அவளுடைய பெற்றோர்கள் வறுமையிலே தவிக்கிறார்கள். ஒரு காலத்தில் பெரிய புள்ளியாக இருந்தவர்கள்தான். ஆகையாலேதான் இவளை இவ்வளவு பெரிய இடத்திலே, சீர் சிறப்புடன் செய்து கொடுக்க முடிந்தது.

ஆனால், ''குடை நிழலிலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடை மெலிந்தோரூர் நண்ணுவது'' தன் தவிர்க்க முடியாத விதியாகிவிட்டதே, இந்தச் சமுதாயத்தில். எனவே செல்வமிழந்து செருக்கிழந்து, மாஜி ஆடம்பரக்காரர்களாக, சோற்றுக்கும் ''தொந்தனை'' போடுகிறார்கள்.

இதைப் பார்த்துக்கொண்டு இன்ப மாளிகையிலே இருக்கும் மகள்—உண்மையிலே மனிதத்தன்மையுள்ளவளானால்—நிம்மதியாக இருக்கமுடியுமா? இவ்வளவு ஆடம்பரப் பொருள்களும் அவளுக்கு இன்பம் கொடுக்கமுடியுமா? உள்ளத்தின் ஒரு மூலையிலே யாருக்கும் தெரியாமல் அழுது தவித்துக்கொண்டு தானே இருப்பாள்.

தன் மாமனார் இப்படியாகிவிட்டாரே என்று மாப்பிள்ளை உதவிசெய்ய முடியுமா? அவர்கையிலிருந்து கொடுக்க வேண்டாம். முன்பு சீர்வரிசையாகச் செய்தாரே அதிலாவது ஒரு பகுதியைத் திருப்பிக்கொடுக்க முற்படுவாரா?

சம்பந்தப்புறத்தைப் பார்த்து அவருடைய வீட்டில் ஏளனம் பேசப்படும். இழிவாக நினைக்கப்படும். மகள் அடிக்கடி தாய்வீட்டுக்குப் போய்வந்தால், எல்லாவற்றையும் திருடிக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டதாகக் கதை கட்டப்படும்.

இதுதானே இன்றைய சமூகத்தின் நிலை.

எனவேதான் இந்த நிரந்தரமற்ற வாழ்க்கையையுடைய இந்த சமுதாயக் கட்டுக்கோப்பு தகர்க்கப்பட வேண்டுமென்று பல அறிஞர்கள் விரும்புகிறார்கள். சிற்சில இடங்

களிலே இந்த ஏற்றத்தாழ்வும் வறுமையும் வஞ்சகமும் நிரம்பிய அமைப்பு தகர்க்கப்பட்டு புதுவாழ்க்கை முறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

உதாரணமாக, சோவியத் யூனியனில், ஒவ்வொருவருக்கும் வாழ்க்கைத்தரத்துக்குப் போதிய வருவாய் வரக்கூடிய வேலை நிரந்தரமாக இருக்கிறது. ஒவ்வொரு குழந்தை பிறந்ததும் குழந்தை வளர்ப்புக்காக உபரிபோனஸ்தொகை தரப்படுகிறது. பின்னர் அவர்களுக்கு வேலை உத்திரவாதம் தரப்பட்டிருக்கிறது. எனவே பொருளாதாரக் காரணம் காதலையோ குடும்ப ஒற்றுமை வாழ்க்கையையோ குலைக்க முடியாத நிலை அங்கே நிலவுகிறது.

சாதிவேற்றுமை காதலுக்கு ஊடே தலையிடமுடியாது. பொருளாதார வேற்றுமை முட்டுக்கட்டை போட முடியாது. யார் வேண்டுமானாலும் யாரையும் மனதிற்குப் பிடித்தவர்களைக் கலியாணம் செய்து கொள்ளலாம்.

எங்கே மனிதனை மனிதன் சுரண்டுவது கிடையாதோ, பொருளாதார வேற்றுமை கிடையாதோ, எங்கே ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கிறதோ, எங்கே சாதி வேற்றுமை கிடையாதோ, எங்கே எல்லோரும் மனிதனை மனிதனாக மதித்து மனிதனாக வாழ்கிறார்களோ, அங்கேதான் காதல் வளரமுடியும். குடும்பம் செழிக்க முடியும். குதூகலம் நிலவமுடியும். அன்பும் அறிவும் பெருக்கெடுத்து ஆனந்தவெள்ளம் பரவமுடியும்.

அப்படிப்பட்ட சமுதாயத்தையும் சூழ்நிலையையும், உண்டாக்குவதற்கு ஒவ்வொரு தம்பதியும் பாடு பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க மணமக்கள் !

---

## • குறிப்பு: திருத்தம்

*39-ம் பக்கம் இருக்கும் படம் தவரான வழிக்குறிய படமாகவும் 40-ம் பக்கம் இருக்கும் படம் சரியான வழிக்குறிய படமாகவும் இருக்கவேண்டும்.*